
ISSN: 2012 - 6352
Reg. No.: 187317
தொண்டன்
ஆரம்பம் 1969 பெப்ரவரி
அறிவோம்.. அறிவிப்போம்...
வேஷம் போட்டால் நல்லவன்
மரத்த வெச்சவன்
தண்ணி ஊத்துவான்......
படைத்தவனின் துணையிருக்க
அடுத்தவனின் துணை எதற்கு....?
சமய - சமூக - இலக்கிய வெளியீடு
பெப்ரவரி - 2019

# தொண்டன்

பெப்ரவரி – 2019

மலர் - 51 இதழ் - 01



✤ ஆசிரியர்
அருட்தந்தை. R. பயஸ் பிரசன்னா

✤ துணை ஆசிரியர்
பெஸ்லியோ வாஸ்

✤ கணினி வடிவமைப்பு
சுபாஜெனி சங்கர்



✤ வெளியீடு
சமூகத் தொடர்பு நிலையம்,
மட்டக்களப்பு மறைமாவட்டம்.

✤ முகவரி
சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ.எண். – 44,
மட்டக்களப்பு.

✤ பதிப்பகம்
வணசிங்கா அச்சகம்,
திருமலை வீதி,
மட்டக்களப்பு.


## உள்ளே...


அன்புடன் உங்களோடு ........ 01
இயேசுவிற்குச் சான்று ........ 02
நான்கு ஆண்டுகளில் ........ 05
அவரே எல்லாவற்றையும் ........ 06
சின்ன விசயங்கள் சிறந்த ........ 07
மருந்து மூலம் மயக்கி ........ 08
மாணவர் பக்கம் ........ 09
அனுபவம் பேசும்போது ........ 10
அமாவாசை அஸ்தமித்தது ........ 12
தோல்விகளையும் ........ 14
பெருமை ........ 17
எண்ணிப் பார்க்கையில் ........ 18
ஆன்மீகத் தேடலும் ........ 19
பொன்விழாவில் பூத்து ........ 21
துன்பத்தில் கரம் கொடுத்த ........ 22
வத்திக்கான் செய்திகள் ........ 23
திரை விமர்சனம் ........ 24
முகத்தில் தெரியும் ........ 25
வினாவிடைப் போட்டி ........ 26
திருவிவிலியம் கற்போம் ........ 27
அறிவை வளர்ப்போம் ........ 28


✱ ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்) ✱


SOCIAL COMMUNICATIONS CENTRE
P.O. BOX - 44
BATTICALOA.
TEL : 065 2226486
E-MAIL : battiscc@gmail.com



விலை: : 50/=
ஆண்டுச் சந்தா : 550/=
(தபாற் செலவு உட்பட)

# அன்புடன் உங்களோடு...

சிரித்து வாழ வேண்டும் – நடித்து வாழ்ந்திடாதே.....

மரத்த வெச்சவன்
தண்ணி ஊத்துவான்......
படைத்தவனின் துணையிருக்க
அடுத்தவனின் துணை எதற்கு....?

**கேட்டதில் சிந்திக்க வைத்தது...**

கணவன் மனைவி இருவரும் குதிரையில் ஏறி ஒரு பயணம் புறப்பட்டார்கள். சிறிது தூரம் சென்றதும் எதிரில் வந்த இருவர் சொல்கிறார்கள் "பாவம்! வாயில்லாத ஜீவன்மேல் ஏறி இருவரும் செல்கிறார்களே...." என்று.

உடனே மனைவி மட்டும் குதிரையில் இருந்து இறங்கிவிட்டாள். கணவன் மட்டும் குதிரையில் உட்கார்ந்து பயணம் செய்தான். இன்னும் சிறிது நேரம் சென்றதும் இன்னும் இருவர் வருகின்றார்கள். அவர்கள் அவனைப் பார்த்து "இரக்கமில்லாதவன் மனைவியை நடக்க வைத்துவிட்டு அவன் மட்டும் குதிரையில் செல்கிறானே" என்று கூறிவிட்டு செல்கிறார்கள்.

உடனே, கணவன் குதிரையில் இருந்து இறங்கி மனைவியை குதிரையில் உட்கார வைத்துவிட்டு நடந்து செல்கிறான். இன்னும் சிறிது தூரம் சென்றதும் இன்னும் இருவர் வருகின்றார்கள். அவர்கள் மனைவியைப் பார்த்துவிட்டு, "இவள் பெரிய கொடுமைக்காரியாக இருப்பாள் போல. கணவனை நடக்க வைத்துவிட்டு அவள் மட்டும் உட்கார்ந்து போகிறாளே" என்றார்கள். உடனே மனைவி கீழே இறங்கி இருவரும் நடந்து சென்றனர். சிறிது தூரம் சென்றதும் மற்றொருவன் வருகிறான். அவர்களைப் பார்த்துவிட்டு, "இவர்கள் முட்டாள்களாக இருக்கிறார்களே. குதிரையை வைத்துவிட்டு நடந்து செல்கிறார்களே" என்றான்.

நாம் எப்படி வாழ்ந்தாலும் இந்த உலகம் எம்மை குறை கூறிக்கொண்டுதான் இருக்கும். நம்மைப் பற்றி மற்றவர்கள் என்ன நினைப்பார்கள், எதையும் பேசி விடுவார்கள் என்று வாழவேண்டாம். நாம் எப்படி வாழ்ந்தாலும் நம்மைப் பற்றி குறை கூறிக்கொண்டுதான் இருப்பார்கள். வாழ்வது ஒரு தரம்தான். அந்த வாழ்க்கையை உங்களுக்காக, உங்கள் விருப்பப்படி சந்தோசமாக வாழுங்கள். நீதியும் நேர்மையும் உள்ளவர்களாக வாழ்வோம். மற்றவர்களுக்குப் பயந்து வாழாமல் துணிந்து வாழ்வோம். இறைவன் துணை நிற்பார்.

– அதிபர் –





- பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகை -
மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்

புதிய ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்ட ஓர் ஆயர் தனது விருதுவாக்காக (MOTTO) "இயேசுவிற்குச் சான்று பகர....." என்பதனைத் தேர்ந்துகொண்டார். அவரது கூற்றின்படி "எனக்கு இயேசுவை ரொம்பப் பிடிக்கும் வேறு யாரும் எனக்கு ஓர் அளவு கோலாக இருக்கக்கூடாது என்று நினைக்கிறேன். எவ்வளவுதான் எனக்குக் கஸ்டங்களும் நஸ்டங்களும் வந்தாலும் நாம் வாழ்ந்து பார்த்திடுவோம் அங்கங்கே சில தடைகள், சில தோல்விகள் இருக்கலாம். ஆனாலும் இயேசுவைப்போல் வாழ்ந்து காட்டி டுவோம். அவரைப்போல இருக்கத்தான் நாம் அழைக்கப்பட்டுள்ளோம். இயேசுவுக்கு கை, கால்கள், புலன்கள் இது எல்லாம் கிடையாது. அதனால் நான் அவருக்கு ஒரு நடமாடும் உடலாக இருக்க நினைக்கிறேன்".

பவுலடியார் சொல்வதைப் போல "நாம் தனியா எதையும் செய்ய முடியாது; ஆனால் அவர் மேல் நம்பிக்கை வைத்தால் கடவுள் உதவியுடன் எதையும் செய்ய முடியும். அதுல நம்பிக்கையுண்டு. தாகூர் சொல்கிறார்: "நீ தூண்டில் போடு கடவுள் மீனை அனுப்புவார். பொருளாதாரமாக இருந்தாலும் சரி; ஆன்மீகமாக இருந்தாலும் சரி; நாம் ஒரு அடி எடுத்து வைத்தால் நிச்சயமாக கருணை புரிவார். காந்தி கூட சொல்லுவார்: "நீங்க நற்செய்தி அறிவிக்க வேண்டும். வெளியில் போய் சுத்தாதீங்க. இந்த ரோஜாவைப் பாருங்க; அழகாக இருக்கு. எல்லாரையும் கவர்ந்திழுக்குது. இருந்த இடத்தில் இருந்தே நற்செய்தி அறிவிக்கலாம். யாராயிருந்தாலும், எதுவாயிருந்தாலும் நேர்மறையாகப் பார்க்க முயல வேண்டும். இருட்டாயிருந்தாலும் அதில் ஒரு மின்னல் இருக்கும். இருளடர்ந்த குகையில்தான் ஒளிமயமான உயிர்ப்பு நிகழ்ந்தது. கடவுள் சில சமயங்களில் இருட்டை அனுப்புவார், ஒளியை பார்க்க வேண்டும் என்பதற்காக.

**ஏன் நற்செய்தியை அறிவிக்க வேண்டும்?**

நற்செய்தி அறிவிப்பு என்பது திருச்சபையின் தலையாயக் கடமை. இன்று கத்தோலிக்கத் திருச்சபை நற்செய்தி அறிவிப்பு சிறப்பாக நடைபெற வேண்டும் என நினைக்கிறது. எமது மறைமாவட்டத்திலும் விசேடமாக இந்த ஆண்டை நற்செய்தி அறிவிப்பு ஆண்டாகப் பிரகடனப்படுத்தி ஆவன செய்து வருகிறோம். அதற்கு நற்செய்தி அறிவிப்புப் பணித்தளங்கள் பொதுநிலையினருக்கு தெளிவான பயிற்சியினை முனைப்புடன் கொடுத்

# இயேசுவிற்குச் சான்று பகர...



துக் கொண்டும், பலரை உருவாக்கிக் கொண்டும் வருகின்றன. மேன்மை மிக்க இந்த நற்செய்திப்பணி ஒரு சிலருக்கு மட்டும் உரியதாக இல்லாமல் எல்லாருக்கும் பொதுவான பணியாக மாற வேண்டும். நற்செய்தியை வாழ்ந்து காண்பித்து, கிறிஸ்தவ சாட்சிகளாய் வாழ அழைக்கப்பட்டவர்களின் கூட்டமைப்பே திருச்சபையாகும்.

**இயேசுவின் நற்செய்தி அறிவிப்புப் பணி :**

'உலக மாந்தர் அனைவரும் மீட்புப் பெற்றுக்கொள்ள வேண்டும். எவரும் அழிந்து போகக் கூடாது' என்ற இறை திருவுளத்தை இயேசு அறிந்திருந்தார். எனவேதான் இம்மண்ணகம் வந்து இறைப் பணியை முழுமையாய்ச் செய்தார். செபத்தில் தனித்திருந்து, விழித்திருந்து இறை விருப்பத்தை அறிந்தார். அனுபவித்தார், அறிவித்தார். கடவுளின் நற்செய்தியை அறிவித்துக்கொண்டே இயேசு கலிலேயாவிற்கு வந்தார். "காலம் நெருங்கி விட்டது. இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது. மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்" என்று அதிகாரத்தோடு பறைசாற்ற ஆரம்பித்தார். நற்செய்தியை பறைசாற்றி நோய், பிணிகளைப் போக்கி, பேய்களை விரட்டியடித்த பின் அந்த ஊர் மக்கள் இயேசுவைத் தேடிக் கொண்டிருக்கின்றனர் என்று சீடர்கள் சொன்ன போது "நாம் அடுத்த ஊருக்குப் போவோம். அங்கும் நான் நற்செய்தியைப் பறைசாற்ற வேண்டும். ஏனெனில் நான் இதற்காகவே வந்திருக்கிறேன்" (மாற் 1:38) என்று கூறினார். ஏனெனில் அவரின் பணியின் நோக்கம், குறித்த காலத்தில் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் அனைத்தையும் அறிந்தவராக இருந்தார்.

பெரும் மக்கள் கூட்டத்திடையே நற்செய்தியைப் பறைசாற்றினார். ஆலயத்தில் அதிகாரத்தோடு போதித்தார். மறைநூல் அறிஞர்கள், பரிசேயர், சதுசேயர் மத்தியில் உண்மையை உரத்துக் கூறினார். அதே நேரம் அதிக வரி வசூலித்து, மக்களை ஏமாற்றிய பாவியான சக்கேயுவை மனமாற்ற அவன் வீட்டிற்கே சென்றார். ஒரு சமாரியப் பெண் மனம் மாற, தம்மை அறிந்துகொள்ள வாய்ப்பளித்து நீண்ட உரையாடலில் ஈடுபடுகிறார். அவரது நற்செய்தி அறிவிப்பு பலரது மனங்களில் மலராக மலர்ந்தது. சிலரது மனதைச் சுட்டெரித்தது. சிலரது மனதில் முள்ளாகக் குத்தி ஊடுருவியது. ஆனால் நம்பிக்கை கொண்ட அனைவருக்கும் மீட்பு என்ற பலன் கிட்டியது.

பணி வாழ்வில் ஆண்டவரை அறிந்தும், அறிவிப்பதும் எத்துணை முக்கியமோ அதுபோல உலகெங்கும் நற்செய்தி பரவிட சீடர்கள் தேவை என்பதும் முக்கியம். இதை அறிந்து இயேசு தம் சீடர்களைத் தேர்ந்து கொண்டார். தம்மோடு இருக்க வைத்து தம்மை அறிய வைத்தார். இறை வார்த்தைகள் மூலம் அனைத்தையும் கற்றுத் தந்தார். இயேசு தம் சீடர்கள் முன்பாக செய்த அற்புதங்களும், அதிசயங்களும் அவர்களுக்கு இறையனுபவத்தைத் தந்துகொண்டே இருந்தன. அதுமட்டுமல்லாமல் நற்செய்திப்பணியில் கடைபிடிக்க வேண்டிய தாழ்ச்சியை, பணிவை தம் செயல்களால் வெளிப்படுத்தினார்.

இயேசுவின் கொடிய சிலுவைச் சாவு, மரணத்திற்குப் பின் அவரின் உயிர்ப்பு, சீடர்கள் மத்தியில் அவர் உறவாடிய நிலை, அவர்கள் கண் முன்பாக அவர் விண்ணகத்திற்கு ஏறிச்சென்றது அனைத்தும் சீடர்கள் இயேசுவை அறியவும், அனுபவிக்கவும் கிடைத்த அரிய நிகழ்வுகள். எல்லாவற்றிற்கும் மேலாக, பெந்தகோஸ்து நாளில் தூய ஆவி பிளவுற்ற நாவுகளாக இறங்கி வந்தபோது அவர்கள் வல்லமையான கருவிகளாக மாற்றம் பெற்றனர். ஏனென்றால் தூய ஆவிதான் இறைவாக்குகளுக்கு உயிர் மூச்சு (திவெ 19:10). தூய ஆவியால் நிறைந்த சீடர்கள் உலகெங்கும் நற்செய்தியைப் பறைசாற்றி திருச்சபையை வளர்த்தனர்.

**நற்செய்திப் பணியில் பேதுரு :**

திருச்சபையைப் பாதுகாத்து அதை வளர்க்க வேண்டிய கடமையையும், திருச்சபையின் மக்களை வழிநடத்த வேண்டும் என்பதனையும், கிறிஸ்துவுக்குள் புதிதாய்ப் பிறக்கும் பிற இனத்தாரையும், பாவ நிலையிலிருந்து மனம் மாறி வருவோரையும் அரவணைத்துப் பராமரிக்க வேண்டிய பணியையும் திருச்சபையின் தலைவராய் இருந்து பேதுரு நிறைவேற்ற

வேண்டும் என்று (யோவா 21:15, 16, 17) இயேசு கொடுத்த பணியை, பெந்தகோஸ்து நாளிலிருந்து பேதுரு வல்லமையாய் நிறைவேற்றினார்.

படிப்பறிவில்லாத பாமரரும், மீனவருமான பேதுரு ஒரு ஞானியைப் போல மறைநூல்களையும் இயேசுவின் இறைவார்த்தைகளையும் ஆற்றலாய் அறிக்கையிடுகிறார். இறைமகனாம் இயேசுவை சிலுவையில் அறைந்து கொன்றதை வன்மையாய்ச் சாடுகிறார். அவரது அருளுரையைக் கேட்ட மக்கள் உள்ளம் குத்தப்பட்டவர்களாய் மனம் மாறி திருமுழுக்குப் பெற்றனர். ஏறக்குறைய மூவாயிரம்பேர் புதிய நம்பிக்கை கொண்ட சமுதாயமாய் ஏற்றத் தாழ்வின்றி வாழ்ந்தார்கள். யூதத் தலைமைச் சங்கத்தின் முன்பும், காவல் தலைவர்கள், பரிசேயர் முன்பும் கைது செய்யப்பட்டு நின்ற போதும் பேதுரு கலங்கவில்லை. "என்ன ஆனாலும் நாங்கள் கண்டதையும், கேட்டதையும் எடுத்துரைக்கா மலிருக்க எங்களால் முடியாது" (திபா 4:20) என்று உறுதியாகக் கூறினார்.

சென்ற இடமெல்லாம் அதிசயங்களும், அற்புதங்களும் நடைபெறுகின்றன. ஒரு புறம் எதிர்ப்புக்கள் அதிகரித்தபோதும், நற்செய்தி இன்னும் அதிகம் பரவியது. பேதுரு தன் திருமுகத்தில் "நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வழிமரபினர், அரச குருக்கள் கூட்டத்தினர், தூய மக்களினத்தினர், அவரது உரிமைச் சொத்தான மக்கள். எனவே, இருளிலிருந்து தமது வியத்தகு ஒளிக்கு அழைத்துள்ளவரின் வியத்தகு செயல்களை அறிவிப்பதும் உங்கள் பணி" (1 பேது 2:9) என்று நமக்கும் இந்த நற்செய்திப் பணியை செய்யும் கடமையை உணர்த்துகிறார்.

**நற்செய்திப் பணியில் பவுல் :**

சவுலாயிருந்து கிறிஸ்தவ நெறியைச் சேர்ந்த அனைவரையும் துன்புறுத்தி வந்தவர் இயேசுவால் தடுத்தாட்கொண்ட பின் உண்மைக் கடவுளை உணர்ந்து கொண்டார். இறைவேண்டலில் ஈடுபட்டிருந்த வேளையில் மெய்மறந்த நிலையில் தனது அழைப்பையும், தான் செய்ய வேண்டிய பணியையும் இறைவனால் அறிந்து கொண்டார். அதன் பிறகு இறை இயேசுவின் வார்த்தைகளை வல்லமையாய் பறைசாற்றினார். நற்செய்தி அறிவித்ததற்காய் யூத சங்கங்களிலும், ஆட்சியாளர் நடுவிலும் சிறைச்சாலையில் இருந்தபோதும் அந்த இடங்களைத் தனது நற்செய்தி அறிவிப்பின் பணித்தளங்களாக மாற்றினார் பவுல். இதுவே, "நற்செய்தியை முன்னிட்டு வெட்கப்படேன். ஏனெனில் அதுவே கடவுளின் மீட்பளிக்கும் வல்லமை" (உரோ 1:16) என்றும்: எனக்கு நேர்ந்தவை அனைத்தும் நற்செய்தி அறிவிக்க ஏதுவாயிற்று" என்றும் அவரால் கூற முடிந்தது. சிறைச்சாலையில் இருந்து கொண்டே பல திருமுகங்களை எழுதி திருச்சபையின் மக்களை ஊக்கப்படுத்தினார். நற்செய்தி அறிவிப்பது தன்மேல் சுமத்தப்பட்ட கடமை என்பதை உணர்ந்திருந்தார்.

**முடிவுரை :**

இத்தகைய மாமனிதர்களால் - புனிதர்களால் கட்டியெழுப்பப்பட்ட இந்தத் திருச்சபையை நாமும் வளர்க்க கடமைப்பட்டிருக்கிறோம். நமது கிறிஸ்தவ வாழ்வு அர்த்தமுள்ளதாக அமைய முதலில் குடும்பம் என்ற குட்டித் திருச்சபையில் இயேசுவை அறிய வைத்து, இறையனுபவங்களைக் கூறி நற்செய்தியை அறிவித்து நம் சந்ததியினரை உருவாக்குவோம். மேலும் நாம் பணி புரியும் இடங்களிலும், நமது பயணங்களிலும் இயேசுவைப் பிரதிபலித்து, வாழ்ந்து, நற்செய்தியின் தூதுவர்களாய்ச் செயல்படுவோம். நாம் வாழும் சமுதாயச் சூழல்களின் இருள் விலகிட நற்செய்தியின் ஒளி ஏற்ற முற்படுவோம். இன்னும் ஆண்டவரின் சிறப்பு அழைப்பினை உள்ளத்தில் உணர்ந்தவர்களாய் நற்செய்தி அறிவிப்புப் பணித் தளங்களில் பயிற்சி பெற்று உரத்த குரலில் உன்னதரைப் பறை சாற்றுவோம்.

"கிறிஸ்தவர்கள் தங்கள் வார்த்தைகளை விட வாழ்வால் கிறிஸ்துவைப் பறை சாற்ற வேண்டும்" என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ்.

**''வாழ்க்கையில் எத்தகைய நிலையிலும் இறைவனை வணங்குபவனே பக்திச் செயல்களில் வெற்றி பெறுவான்''. – சுவாமி துரியானந்தர்**

# நான்கு ஆண்டுகளில் நடக்கப் போவது என்ன...?



ஒரு தேன் கூட்டில் ஒரு ராணி தேனீ, ஆண் தேனீக்கள், 80 ஆயிரம் வேலைக்கார தேனீக்கள் இருக்கும்.

ராணி தேனிதான் அந்த கூட்டத்திற்கு தலைவி. முட்டையிடுவதும், வேலைக்கார தேனீக்களுக்கு கட்டளை இடுவதும்தான் இதன் வேலை. கூட்டில் இருக்கும் ஆண் தேனீக்களுக்கு எந்த வேலையும் கிடையாது. இவைகளின் ஒரே பிரதான வேலை இனச் சேர்க்கை மட்டுந்தான். 80 ஆயிரம் வேலைக்கார தேனீக்களும் முழுமையாக வளர்ச்சியடையாத பெண் தேனீக்கள்தான். இதனால் முட்டையிட முடியாது. எனவே, இவை எப்போதும் வேலைக்கார தேனீக்களாகவே இருக்கும்.

பருவம் அடைந்ததும் ராணி தேனீயின் உடலில் இருந்து ஒருவித வாசனை வெளிப்படும். அது ஆண் தேனீக்களை கவர்ந்திழுக்கும். அந்தநேரத்தில் ராணித் தேனீ கூட்டைவிட்டு வெளியே வந்து வானத்தை நோக்கிப் பறக்கும். உடனே ஆண் தேனீக்களும் காதல் உணர்வுடன் ராணி தேனீயைப் பின் தொடரும். அது தொடர்ந்து மேல் நோக்கி பறந்துகொண்டே வரும். பாதி உயரத்திலேயே முக்கால்வாசி ஆண் தேனீக்கள் தொடர்ந்து பறக்க முடியாமல் திரும்பிவிடும்.

கடைசியாக ராணி தேனீக்கு சமமாகப் பறந்து வந்த ஆண் தேனீக்கு உறவுகொள்ள அனுமதி கிடைக்கும். இந்த உறவு மிக உயரத்தில் வானிலே நிகழும். உறவு முடிந்ததும் அந்த ஆண் தேனீ இறந்து விடும். மறுநாளும் இதேபோல் இன்னொரு ஆண் தேனீயுடன் உறவு நிகழும். இப்படியே தொடர்ந்து நான்கு நாட்கள் நடைபெறும். அதன்பின் ராணி தேனீ தொடர்ந்து முட்டையிட்டுக் கொண்டே இருக்கும்.

அந்த முட்டையிலிருந்து 13 நாட்களில் தேனீக்கள் பொரித்து வெளிவரும். பிறந்து ஒரு வாரம் ஆன தேனீக்களுக்கு கூட்டை சுத்தப்படுத்துவதுதான் வேலை. இந்தவகை தேனீக்களை 'ஹவுஸ் கீப்பிங் பீ' என்கிறார்கள். இதுபோக காவல்கார தேனீக்கள் இருக்கின்றன. இவைதான் கூட்டை எதிரிகளிடம் இருந்து பாதுகாக்கின்றன. மனிதர்களைப் போலவே தேனீக்களிலும் திருடர்கள் உண்டு. ஒரு கூட்டில் இருக்கும் தேனீ மற்றொரு கூட்டுக்குள் நுழைந்து அங்கு சேமித்து வைக்கப்பட்டிருக்கும் தேனை திருடிச் சென்றுவிடும். அத்தகைய தேனீக் களை அடையாளம் கண்டு அவைகளுடன் போரிட்டு விரட்டி அடிப்பதோ அல்லது கொன்று விடுவதோ காவல்கார தேனீக்களின் வேலை.

தேனீக்கள் 90 நாட்கள் வரை உயிர்வாழக் கூடியவை. பிறந்து ஒரு வாரத்துக்கு மேலான தேனீக்கள் மலர்களில் இருந்து தேனை சேகரித்து வரும் வேலையைப் பார்க்கின்றன. 55 நாட்களுக்கு மேல் உள்ள வயதான தேனீக்கள் அந்தப் பகுதியில் எங்கெங்கு தேன் கிடைக்கும், மலர்கள் நிறைந்த இடங்கள் எங்கிருக்கின்றன என்ற தகவல்களை வேலைக்கார தேனீக்களுக்குத் தெரிவிக்கும். அனுப வம் நிறைந்த இந்த வயதான தேனீக்கள் கூறும் தகவலை வைத்தே தேனீக்கள் தேனைச் சேகரித்து வருகின்றன.

தேனீக்கள் இல்லையென்றால் அடுத்த நான்கு ஆண்டுகளில் மனிதன் உட்பட அனைத்து உயிரினங்களும் மடிந்து போகும் நிலை ஏற்படும். காரணம், தேனீக்கள் மூலம் நடைபெறும் மகரந்த சேர்க்கையால்தான் நமக்கு தாவரங்கள் மூலமாக உணவு கிடைக்கிறது. தேனீக்கள் இல்லையென்றால் மகரந்த சேர்க்கையும் இல்லை, உணவும் இல்லை, பல உயிரினங்களும் இல்லை. ■

> "மனிதனை மனிதனாக்குபவை
> உதவிகளும் வசதிகளும் அல்ல;
> இடையூறுகளும் துன்பங்களுமே"
> – மாத்யூஸ்

# இவரே எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வார்...



ஒவ்வொரு வருடமும் மாசி மாதம் 02ம் நாளை கத்தோலிக்கத் திருஅவை, இயேசு ஆண்டவரை அவரது பெற்றோர் காணிக்கையாக அர்ப்பணித்த திருவிழாவாக நினைவுகூர்ந்து கொண்டாடுகிறது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் எல்லாத் தலைப்பேறுகளும் ஆண்டவருக்குச் சொந்தம் எனக் கருதி அவற்றைக் கோயிலுக்கு எடுத்துச் சென்று அர்ப்பணமாக்கும் வழக்கம் இருந்து வந்தது. இதன்படியே குழந்தையாக இருந்த இயேசு ஆண்டவரையும் அவரது பெற்றோர் யோசேப்பும் மரியாவும் அர்ப்பணமாக்கு வதற்காகக் கோயிலுக்குக் கொண்டு சென்றதையும் அவ்வேளை கோயிலுக்கு வந்த முதியவர்களான சிமியோன், அன்னாள் ஆகியோர் யேசுவையும் அவர் பெற்றோரையும் வாழ்த்திப் போற்றியதுடன் குழந்தை இயேசுவைப் பற்றியும் அங்கு இருந் தோருக்கு எடுத்து உரைத்தமை தொடர்பிலும் திருவிவிலியத்தில் நாம் படிக்கிறோம்.

ஒப்பற்ற, உயர்ந்த, பெறுமதி மிக்க ஒன்றைச் சுய விருப்பத்துடன் கடவுளுக்கு ஒப்புக்கொடுப்பது காணிக்கை என்பது இதிலிருந்து புலனாகிறது. இதற்கும் மேலானதொன்று இந்த விடயத்தில் காணப்பட் டதாக எனக்குத் தென்பட்ட தினால் அதனை உங்களு டன் பகிர்ந்துகொள்ள ஆசிக்கின்றேன்.



J. பத்திநாதன்

மரியாவின் பெற்றோர் சுவக்கீன் - அன்னம்மாள் என் பவராவர். இவர்கள் தங்களுக்கு மகளாகப் பிறந்த சிறுமி மரியாவை ஆண்டவருக்கு கோயிலில் காணிக்கையாக அர்ப்பணித்த வர்கள். மரியாவின் சிறு பராயத்தில் நடந்த இந் நிகழ்வு மரியா வளர்ந்தபோது அவளுக்கு அவளது பெற்றோரால் தெரியப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். இதனால்தான் கடவுளின் செய்தியை தனக்குத் தெரியப்படுத்த வந்த கபிரியேல் தூதரிடம் "நான் ஆண்டவரின் அடிமை" என மரியாள் கீழ்ப்படி வோடு கூறியதற்கான காரணமாகக் கொள்ள முடியும். இதேபோன்றே இயேசுவும் தான் இறை வனுக்கு காணிக்கையாக அர்ப்பணிக்கப்பட்டவர் என்பதனைத் தெரிந்துவைத்திருந்த படியினாலேயே மரியாவிடம் "நான் என் தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாததா" என்று வினவி நின்றதையும், அவர் வாழ்நாளில் நெடு நேரம் செபத்தில் தந்தையுடன் நிலைத்திருந்தார் எனவும் அறிகிறோம். மேலும், இறுதி மூச்சை சிலுவை மரத்தில் விடுகின்ற சந்தர்ப்பத்திலும் தந்தையே உம் கையில் என் உயிரை ஒப்படைக்கி றேன் என்று கூறி எமக்காக பலியாகத் தன்னையே ஒப்புக் கொடுக்க அவரால் முடிந்தது.

மரியாளின் சுத்திகர திருவிழாவும், இயேசு காணிக்கையாக அர்ப்பணிக்கப்பட்ட நிகழ்வும் ஒரு முக்கிய செய்தியை எமக்குத் தருவதாக நான் உணர்கிறேன். நாம் எம் பிள்ளைகளை, பேரப்பிள்ளைகளை ஆண்டவருக்குக் காணிக்

கையாக அர்ப்பணிக்க ஊக்குவிக்க வேண்டும். அவர்களது சிறு பராயத்தில் நிகழும் இந் நிகழ்வை அப்பிள்ளைகள் வளர்ந்து வரும் சமயத்தில் அவர்கள் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் அவர்கள் மனங்களில் பதிவு செய்ய முயற்சிக்க வேண்டும். அப்போது அவர்கள் வளர்ந்து பெரியவர்களாக மாறும் வேளையில் இதே பழக்கம் சுவக்கீன் - அன்னம்மாள், யோசேப்பு - மரியாள் என்ற தலைமுறையோடு நின்று விடாமல் வாழையடி வாழையாக நீடித்து நிலைக்கும் ஒரு பழக்கமாக மாற்றம் காணும்.

காணிக்கைத் தாய் மரியைப் போற்றுவோம். அவள் புகழ் சாற்றுவோம். அவளது திருவிழாவை அர்த்தம் அறிந்து கொண்டாடிடத் தயாராவோம். ■

## வினா விடைப் போட்டி - இல 09

**சரியான விடைகள்**

1. மாட்டின் ஹைடகர்
2. தோமஸ் அல்வா எடிசன்
3. தூதுளம் பூ அல்லது தூதுவளைப் பூ
4. இறைவா உமக்கே புகழ்
   மே 25, 2015 .
5. மார்ச் 13, 2013 இல் தென்னமெரிக்காவில்
   (Lumen Gentium)
6. இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை
   09.08.2018
7. 2019ல் டமாஸ்கஸின் ஆயுபிட் சுல்தானாகிய அல் முவாஸ்ஸம் என்பவனின்
8. அவரது படைக்கலன்களைத் தாங்குவோன்
9. வீரர்களுள் ஒருவனால், யோனாத்தானுக்கு
10. அம்ஸ்டடாம்

## சின்ன விஷயங்கள் சிறந்த வாழ்க்கை

***மறக்க முடியாத ஆசிரியர்கள் ...***


அந்த ஆசிரியர் ஓய்வு பெற்றார். அவருக்குப் பாராட்டு விழா நடத்தினார்கள். "நீங்கள் தலைசிறந்த ஆசிரியர். உங்களால் மறக்க முடியாத ஆசிரியர் யார்?" என்று கேட்டபோது, அவர் சொன்னார், "நான் முனைவர் பட்டம் முடித்தவுடன், படித்து முடித்ததாய் நினைத்தேன். வகுப்பில் மாணவர்கள் சந்தேகங்கள் கேட்கத் தொடங்கியதும் முதலில் திணறினேன். பிறகு தினமும் மறுபடி படிக்கத் தொடங்கினேன். எனவே, என்னால் மறக்கமுடியாத ஆசிரியர்கள் என் மாணவர்கள் தான்" என்றார். கற்றுக்கொள்ளலாம், எப்போது வேண்டுமானாலும்! யாரிடம் வேண்டுமானாலும்.

***அப்படியோர் அண்ணனாக ....***

பணக்கார இளைஞனின் விலையுயர்ந்த கார் நின்றுகொண்டிருந்தது. ஏழைச் சிறுவன் ஒருவன் எட்டி நின்று அந்தக் காரையே ஆசையுடன் பார்த்துக் கொண்டிருந்தான். சிரித்துக்கொண்டே அந்த இளைஞன் சொன்னான், "இது என் அண்ணன் எனக்குப் பரிசளித்தது". சிறுவன் முகத்தில் வியப்பு. "உனக்கு அப்படி ஓர் அண்ணன் இருந்திருக்கலாம் என்று ஆசைப்படுகிறாயா" இளைஞன் கேட்டான். சிறுவன் சொன்னான், "இல்லை! அப்படியோர் அண்ணனாக வளர வேண்டுமென்று விரும்புகிறேன்".


நம்பிக்கையுணர்வு நல்லெண்ணங்களையே வளர்க்கும்.

- ஜே.எஸ். இரத்தினராஜா -



காற்றில் ஆடும் அழகு மர இலைகளோ
கீழே வீழ்ந்தால் சருகாகி எரிபடுமே
காலம் செல்லும் அருங்கதை கேட்டே
தள்ளி விடாது கவனம் கொள் வாழ்வாய்.

33



# மருந்து மூலம் மயக்கி விடுவோர்கள்




**அ**றுவை சிகிச்சை என்றவுடன் நமக்கு முதலில் நினைவுக்கு வருவதும், நாம் மிகவும் பயன்படுத்துவதும் வலியைப் பற்றிதான். வலியில்லா அறுவைச் சிகிச்சைக்கு முதன் மதலில் வித்திட்டவர் டபிள்யூ. ஜி. மார்ட்டின். இவர் அமெரிக்கா நாட்டைச் சேர்ந்த பல் மருத்துவர். 1846ம் ஆண்டு அக்டோபர் 16ந் திகதி மாஸாசேட் ஜெனரல் ஆஸ்பத்திரியில் எட்வர்ட் கில்பர்ட் என்ற நோயாளியின் கழுத்தில் இருந்த இரத்த கட்டியை அகற்ற ஈதர் என்ற மயக்க மருந்தை முதன் முதலில் பயன்படுத்தி நோயாளியை மயக்க நிலைக்கு உட்படுத்தி அறுவை சிகிச்சையை வலி இல்லாமல் செய்து காட்டினார். அதற்கு முன்பெல்லாம் அறுவை சிகிச்சைக்கு வலி தெரியாமல் இருக்க நோயாளிக்கு அதிக அளவில் மது அருந்தச் செய்து, அவர்களை மயக்க நிலையில் வைத்திருப்பர். அந்த நோயாளி மயக்கம் தெளிவதற்குள் அறுவை சிகிச்சை நிபுணர் ஆபரேஷனை செய்து முடிப்பர். அந்த நிலையை முற்றிலும் மாற்றி மருந்து மூலம் மயக்கம் செலுத்தி அறுவை சிகிச்சை செய்ய முடியும் என்று உலகிற்கு மார்ட்டின் நிரூபித்துக் காட்டிய ஒக்டோபர் 16ந் திகதியை 'உலக மயக்கவியல் தின'மாக நாம் கடைபிடிக்கிறோம். அறுவை சிகிச்சையின்போது பொதுவாக மூன்று வகையான முறைகளில் மயக்க மருந்து கொடுக்கப்படுகிறது.

முதல் வகையில், 'ஸ்பைனல் அனேத்சியா' எனப்படும் முதுகுத் தண்டில் ஊசி குத்தி மூளை தண்டு வட திரவத்தில் மயக்க மருந்து செலுத்துவது. அடி வயிறு, தொடை மற்றும் கால் பகுதியில் செய்யப்படும் அறுவை சிகிச்சைகளை வலியின்றி மேற்கொள்ள இம் முறை உதவுகிறது. 2வது முறை, நரம்பு செயலிழப்பு முறை.

அதாவது, அறுவை சிகிச்சை செய்யப் போகும் பாகத்திற்கான வலி உணர்வை உண்டாக்கும் நரம்புகளை மட்டும் மரத்துப் போகச் செய்தல். பெரும்பாலும் தோள்பட்டை மற்றும் கைகளுக்கான அறுவை சிகிச்சைகள் இம் முறையில் மேற்கொள்ளப்படுகிறது. இந்த வகையில் நரம்பு செயலிழக்க இப்போதெல்லாம் அல்ரா சவுண்ட் ஸ்கன் கருவியினை உபயோகப்படுத்தி மிகவும் துல்லியமாக தேவைப்பட்ட நரம்புகளில் மட்டும் மயக்க மருந்து கொடுக்கப்படுகிறது. மேற்கூறிய இரண்டு முறைகளிலும் நோயாளி சுயநினைவுடன் இருப்பார். 3வது முறை நாம் அனைவரும் யூகித்து வைத்துள்ள மயக்க முறை. அதாவது முழு மயக்கம் கொடுத்தல். இம்முறையில் தலை, கழுத்து மற்றும் பெரிய நீண்ட நேர அறுவை சிகிச்சைகள் மற்றும் லேப்ராஸ்கோப் எனப்படும் நுண்துளை அறுவை சிகிச்சை ஆகியவை வலியின்றி சாத்தியப்படுத்திய முறை இதுவாகும். இம் முறையில் அறுவை சிகிச்சையின்போது நோயாளிக்கு குரல்வளையில் குழாயிட்டு செயற்கை சுவாசம் அளிக்கப்படும். தேவைப்பட்டால் அறுவை சிகிச்சைக்குப் பின்பும் செயற்கை சுவாசம் தொடரப்படும். இந்த முறையில் நோயாளிக்கு சுயநினைவு இருக்காது. மயக்க மருத்துவத்தில் பொதுவாக மக்கள் பயப்படும் விஷயம் என்னவென்றால், அளவுக்கு அதிகமான மருந்து செலுத்தப்பட்டு உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுவிடுமோ என்பதாகும். அவ்வாறு பயப்படத் தேவையில்லை. ஏனென்றால், மருத்துவர் உங்கள் அருகிலேயே இருந்து உங்கள் மருந்தின் அளவு, நாடித்துடிப்பு, இரத்த அழுத்தம் மற்றும் இன்ன பிற உயிர் அளவீடுகளை விழிப்புடனும், கவனமாகவும் ஒவ்வொரு நொடியும் கவனித்துக் கொண்டிருப்பர். சர்க்கரை வியாதி உள்ளவர்கள் மாத்திரை எடுத்துக்கொண்டிருந்தால் அதனை நிறுத்தி அறுவை சிகிச்சைக்கு சில நாட்களுக்கு முன்பே இன்சுலின் ஊசிக்கு மாற்ற வேண்டியது இருக்கும். அதைப்போல இரத்த அழுத்தத்துக்கான மாத்திரை எடுத்துக் கொண்டிருந்தால் அதனை அறுவை சிகிச்சை நாள் அன்றுவரை தொடர வேண்டியிருக்கும். பொதுவாக மருத்துவர்கள் கூறும் அறிவுரைகளை அப்படியே பின்பற்ற வேண்டும். தவறும் பட்சத்தில் அது உயிருக்கே ஆபத்தாக அமைந்துவிடும்.



# கிறிஸ்தவம்
# மாணவர் பக்கம்

க.பொ.த உயர்தரம்

- நில்மினி கஜேந்திரன் -

**மனிதத்துவமும், மனித உரிமைகளும் மற்றும் கடமைகளும் :**

மக்களின் உருவாக்கத்தின் அடிப்படையில் ஆனதே திருச்சபையாகும். இந்தவகையில் மக்களைப் பாதிக்கும் அனைத்தும் திருச்சபையினையும் பாதிக்கிறது. திருச்சபையினுடையத் தன்மையை, இயல்பை, வாழ்வை, பணியை அலசி ஆராய்ந்து, அவற்றில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தக் கூடிய வத்திக்கான் சங்கம், இன்றைய உலகில் திருச்சபை எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து, இவற்றினைத் தீர்ப்பதற்கான தகுந்த ஆலோசனைகளை வழங்காமலிருக்க முடியாது. இதன் வெளிப்பாடுதான் இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் வெளியிட்ட 'இன்றைய உலகில் திருச்சபை' எனும் சமூகக் கொள்கை விளக்கமாகும். இதுதான் இச்சங்கம் வெளியிட்ட 16 கொள்கைத் திரட்டுகளில் மிகப் பெரியதாகும். இவ்வேடானது புதியதொரு சமூகக் கொள்கையை வரையறுத்திட எழுதப்படவில்லை. மாறாக சமூக வாழ்க்கை பற்றி திருச்சபை வழங்கும் போதனையை ஓர் புதிய பாதையில் விளக்குகிறது. காலத்தின் குறிகளை அறிந்து அதன்வழி வெளிவரும் உலகமின் இன்றைய நிலைமையினை அலசி ஆராய்ந்து, உலகில் ஏற்பட்டிருக்கம் பல்வகையான மாற்றங்களை, முக்கிய பிரச்சினைகளை இனம் கண்டு, இவற்றுக்கான தீர்வு வழிமுறைகளை முன்வைக்கிறது.

இதற்கு முதலில் எவ்வித சமூகப் பிரச்சினைகளின் தீர்வுக்கும் அடிப்படையாக இருக்கின்ற 4 முக்கிய கிறிஸ்தவ கோட்பாடுகள் முன்வைக்கப்படுகின்றன. அவையாவன, மனித மாண்பு, மனித சமூகம், மனித செயல், இன்றைய உலகில் திருச்சபையின் பணி. மனிதன் மாண்புள்ளவனாய் இறைச்சாயலிலும் பாவனையிலும் படைக்கப்பட்டவன். அவனிடம் இருக்கும் அழியா ஆன்மா, அறிவு, மனச்சான்று, சுதந்திரம் அனைத்தும் அவனுடைய மாண்பிற்கு காரணமாய் இருக்கிறது. மனிதன் தனித்து வாழ முடியாது. சமூக பிறவி. அவனைால் வாழ, வளர, திறன்களை ஆற்றல்களை வளர்க்க இயலாது. இதற்கு சமூகம், குடும்பம், அரசியல், சமுதாயம் தேவை. அவனுடைய சமூகப் பண்பிலிருந்து பிறப்பது சமத்துவம். மனிதர்கள் அனைவரும் சமம். மனிதரின் அடிப்படை உரிமைகளை பொறுத்தவரையில் பால், இனம், நிறம், சமூக நிலை, மொழி, மதம் காரணமாக பாகுபாடு காட்டுவது கண்டிக்கப்படுகிறது. சமூகமயமாக்கல் ஊக்குவிக்கப்படுகிறது. சமூகங்களின் நோக்கம் பொதுநலனைப் பேணுவதே மனிதனுடைய உணவு உரிமை, உடை உரிமை, உறைவிடம், வாழ்க்கை நிலையினை தெரிந்து கொள்ளும் சுதந்திரம், குடும்பம் அமைக்கும் உரிமை, கல்வி உரிமை, தொழில் உரிமை, சரியான தகவல் பெற உரிமை போன்ற அடிப்படை உரிமைகள் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

இதனைத் தொடர்ந்து இன்றைய உலகில் அவசியம் தீர்க்கப்படவேண்டிய சில முக்கிய பிரச்சினைகள் ஆராயப்படுகின்றன. திருமண, குடும்ப வாழ்வு, பண்பாடு, சமூக பொருளாதார வாழ்வு, அரசியல் வாழ்வு, சூழல், பாதுகாப்பு, உலக அமைதியும் போர்த்திகிலும் போன்றவை தனித்தனியே ஆராயப்பட்டு உரிய ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. இன்றைய உலகில் நிலவும் அநீதிகள், ஏற்றத்தாழ்வுகள் பற்றித் தெளிவாகக் குறிப்பிடப்படுகின்றது. மனுக்குலத்தை வாட்டும் இப்பிரச்சினைகள் மாற வேண்டுமாயின் மனித உள்ளங்கள் மாற வேண்டும். கிறிஸ்தவ மதிப்பீடுகள் வழங்கப்படவேண்டும்.

வத்திக்கான் சங்கத்தின் சமூகப் படிப்பினைகளின் தாக்கத்தை நாம் இலங்கைச் சமூகத்தின் பல்வேறு துறைகளில் காணக்கூடியதாயுள்ளது. மனித மாண்பு, சமத்துவம் என்பன சமூகத்தில் பொதுவாக அனைவராலும் மதிக்கப்படுகின்றன. கடந்த காலங்களில் நிலவிய சாதி வேற்றுமைகள், பிளவுகள் போன்றவை குறைந்துள்ளன. இன மத மொழி அடிப்படையில் பாரபட்சம் காட்டப்படும்போது அதற்கெதிராய்க் குரல் கொடுக்கிறது. குடும்ப வாழ்வு, அன்புறவு, ஒருமைப்பாடு, கட்டவிழாமை போன்றவை வலியுறுத்தப்படுகிறது. அனைத்துத் துறைகளிலும் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. மனித உரிமைகள் மீறப்படுவது பற்றி அதிக கவனம் செலுத்தி வருகிறது. உள்நாட்டுப் போரின்

– 16ம் பக்...


## அனுபவம் பேசும்போது ....

# போனால் போகட்டும்



இளவயதுக் கால கட்டத்தில் ஒன்றைச் செய்வதும், அது பிழைத்துப் போகின்றபோது போனால் போகிறதென்று இன்னுமொன்றைத் தெரிந்துகொள்வதும் வயதுக்குரிய துடிப்பையும், ஆபத்துக்களை எதிர் நோக்கும் துணிச்சலையும், சந்தர்ப்பத்தை எடுத்துக்கொள்ளும் தைரியத்தையும் எடுத்துக்காட்டுகின்றது. எல்லாமே தவறாகிப் போகின்றபோதுதான் தொடர்ந்து அவ்வாறு செயற்படாதிருக்க அறிவும், அனுபவமும் கைகூடி வருகின்றது. என்னதான் நமக்கு முன்னாலும் நம்மோடும் வாழ்ந்தவர்கள், வாழ்பவர்கள் வாழ்வு நமக்குப் படிப்பினையாக அமைந்தாலும், அதை கருத்திற்கெடுத்துக்கொள்ளும் தகமை எங்களிடம் இருப்பதில்லை!

சுட்டுக் கொள்ளாதவரை தொடும்போது சுடும் நெருப்பின் அனுபவம் நமக்கு நமக்கென ஏற்படும்போது தான் தொட்டால் சுடுவது நெருப்பு என்பது உறைக்கிறது. மற்றவன் சுட்டுக் கொண்டதைக் கண்டும், நமக்கு அறிவு வருவதேயில்லை' அது நம் அறிவைத் தொடுவதேயில்லை.



ஆனந்தா
ஏ.ஜீ. இராஜேந்திரம்

வயது ஏற ஏற, வாழும் நமக்கான காலம் மட்டுப்படுத்தப்படுகிறதென்ற சிந்தனை மனதில் உதயமாகின்றபோது. இந்த மாதிரி சந்தர்ப்பங்களை எடுக்கவும், ஒன்று போனால் மற்றொன்று என்று வேறு வழி பார்க்கவும் நாம் தயங்க ஆரம்பிக்கின்றோம். அதன் பிறகு....? ஒன்றில் கால் வைக்கும் முன்னம் ஒன்றுக்குப் பல தடவைகள் நாம் சிந்திக்கத் தலைப் படுகின்றோம் இல்லையா? மனதில் ஒரு பயம். சந்தர்ப் பங்களை எடுக்கவும், புது முயற்சிகளில் இறங்கவும் நமக்குள் தயக்கம் உருவாகத் தொடங்கிவிடுகின்றது. அத்தோடு எமது வாழ்க்கையோட்டம் ஒரு தடையைக் கண்டு விடுகின்றது. வாழ்வில் தேக்கம் ஒன்று உருவாகி விடுகின்றது.

அதிக கொழுப்பு உணவுகள் சாப்பிடுவது மாரடைப் புக்கு வழி கோலும் என்று நமக்குத் தெரிகின்ற குறைந்த வயதுக் காலத்திலே, அடுத்திருக்கிறவன் மாரடைப்பால் செத்தாலும் நமது உணவுப் பழக்கத்தில் மாற்றம் வந்ததில்லை. ஆனால் சற்றே முதுமை நம்மை எட்டிப் பார்க்கின்ற வேளையில் வீட்டில் மனைவி மக்கள் என்ற ஆட்தொகை, உறவுத் தொகை அதிகரித்து, நம் பொறுப்புக்கள் நம் தலை மேல் ஏறி பாரமாய்க் கனக்கத் தொடங்கிவிட்ட பிறகு. அடுத்திருப்பவன் அலுவலகத்தில் வாயுத் தொல்லையால் நெஞ்சு வலிக்கிறது என்றாலும் அவனை விடவும் நமக்குத் தான் அச்சம் அதிகரிக்கிறது. நமது வாழ்வின் போக்கிலும் மாற்றம் உருவாகத் தொடங்குகிறது. ஆனால் அன்று இருந்ததும், இன்று இருப்பதும் ஒரே ஆள்தான்' அதே ஆள்தான்!

இருந்தும் வாழ்வு முடிவடைந்த பின்னர் நம் வாழ்க்கை சுவடாக மாறி விடுவதென்பது சகஜமானதும், நன்மையானதாகவும் இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால் வாழும்போது இப்படி நிகழ்வதை அனுமதிப்பது நல்லதா? சிந்திக்க வேண்டிய விடயம்தான்.

இளமையோ முதுமையோ மீண்டும் ஒரு முறை என்று வாழ்வில் அடுத்த கட்டம் நோக்கி நாம் நகர முனைவது வாழ்வில் எமக்கிருக்கின்ற பிடிப்பையும், ஊக்கத்தையும், ஆர்வத்தையும், வேகத்தையும் எடுத்துக் காட்டும் என்பதில் சந்தேகமேயில்லை. இள வயதினர்

ஒரு ஆணும் பெண்ணும் காதலிக்கவே செய்கின்றனர். அது வயதுக் கோளாறாயினும், அவர்கள் அதைப் பொருட்படுத்திக் கொள்வதேயில்லை. அவளின்றி அவனும், அவனின்றி அவளும் வாழவே முடியாதென்று பிடிவாதமாக இருக்கின்றனர். திடீரென்று அவர்களுக்குள் பேதம் ஒன்று வந்து விட்டால் அவன் அவனது வழியில், அவள் தனது தனி வழியில்! நீயின்றி நானில்லை என்றவர்கள், நீயில்லாவிட்டால் வேறு ஆளில்லையா? என்று நடையை எதிர்த்திசையில் போடத் தொடங்குவதில்லையா? அது ஏன்? அது அவனுக்கோ அல்லது அவளுக்கோ வாழ்வில் உள்ள பிடிப்பின் காரணம்தான். வாழும் ஆர்வமும், ஆசையும்தான் காரணம். ஒரு பாதை அடைபட்டால் மறு பாதையை வடிவமைத்துக் கொள்ள அவர்களுக்கிருக்கின்ற துணிவும், துடிப்பும்தான் அதற்குக் காரணம்.

வயதேறிவிட்டாலோ இந்த நிலைக்கு நம்மால் வர முடிகிறதேயில்லை. ஆனாலும், மூன்றாம் நபர்களுக்கு தொல்லைகள் இல்லாத வரையில் இளம் சந்ததியும் சரி, முதிய பரம்பரையும் சரி கிடைக்கின்ற ஒரு அனுபவத்தோடே வாழ்வு முடிந்து போனதாக எண்ணி விடாமலிருக்க வேண்டும். திரும்பத் திரும்ப வாழவும், அன்பு செய்யவும், மீண்டும் முயற்சி செய்யவும், கனவு காணவும், வாழவும் முயற்சிக்க அவர்களை நாம் பயிற்றுவிப்பது அவசியம். இதனால் எடுத்ததெற்கெல்லாம் ஆற்றையும், கடலையும், கயிற்றையும், நஞ்சையும் நாடி விடாமல் "போனால் போகட்டும் போடா" என்கின்ற பாணியில் அடுத்த கட்டத்திற்குத் தங்கள் உயிர் வாழ்வை முன்னெடுத்துச் செல்வதற்கு நாம் அவர்கைளயும், ஏன் எம்மையும் தான் தயார்ப்படுத்த வேண்டும்.

நம் பிள்ளைகளால், கணவன், மனைவியால், அண்டை உறவுகளால் மனமுடைந்து போகின்ற வாய்ப்பு எங்களுக்கு ஏராளம் இருக்கிறதை நாம் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும். அனைவராலும் பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றபோது புறமுகிகளாகச் செயற்பட முடியாது. நம்மில் அகமுகிகளாக, எதையும் தம் மேல் தூக்கிப் போடுகின்றவர்களாக வாழும் ஏராளமானோர் நம் மத்தியில் இருக்கின்றபோது, ஒரு அனுபவம் வாழ்வே மாயம் என்றோ, எல்லாம் முடிந்ததென்றோ தப்பான முடிவுக்கு வருவதை சரியென்று கூறிவிட முடியாது.

> **''நீர்நிலையில் கல்லை எறிந்தால், நீரை மூடிக்கொண்டிருந்த பாசி கலைந்து நல்ல நீர் கண்ணுக்குப் புலப்படும். அதுபோல, நல்லவர்கள் சொல்லும் சொற்களின் உண்மைப் பொருளை ஆராய்ந்தறிந்தால் அறிவு தெளிவடையும்''.**
>
> **- தாயுமானவர் -**

ஏதோ ஒரு அனுபவம் நம் இதயத்தைக் கடினப்படுத்தவும், நமது வாழ்வின் பாதையை மாற்றியமைக்கவும் அனுமதிப்பது நம்மை நாமே தாழ்வு படுத்திக்கொள்ளும் செயல்தான். நமது பாதையை, நமது வாழ்வை முடிவெடுப்பது நமது பகுத்தறிவாக இருக்க வேண்டுமேயல்லாது நாம் அவ்வப்போது, இருந்திருந்து சந்திக்கின்ற வாழ்க்கை அனுபவங்களாக இருப்பதை அனுமதிக்கவே முடியாது.

ஓர் எறும்பு கூட தான் நகருகின்ற பாதையில் தடையொன்றைச் சந்தித்து விட்டால் அது அப்படியே தலையில் கையை வைத்துக் கொண்டு ஏக்கத்தோடு அந்த இடத்தில் குந்தி விடுவதில்லை. அந்தத் தடையைச் சுற்றி வந்து தன் பாதையைத் தானே வகுத்துக் கொண்டு போகின்ற பயணத்தை முடிக்கவே செய்கின்றது! அடுத்தது என்ன என்று மறு கட்டம் நோக்கி அஞ்சாது வாழ்வை முன்னெடுக்கும் தைரியத்துடன் மீளவும் முதலிலிருந்து வாழ, அதாவது முயற்சியில் இறங்க நாமும்தான், நமது இளைய பரம்பரையும்தான் எந்நேரமும் தயார் நிலையில் இருப்பதை நாம் உறுதி செய்ய வேண்டும். வெறும் கயிறும், ஆறு குளமும், நஞ்சும் நமது வாழ்வை முடித்து வைக்க நம்மை மலினப்படுத்திக்கொள்வது ஆரோக்கியமானதல்ல. அடுத்தது என்பதுதான் ஆக்கபூர்வமான தேடலாக அமைய முடியும்.

யாராயினும் ஒன்று முடிவல்ல அடுத்தது? என்ற கேள்வியை உருவாக்கி மீண்டும் வாழ முற்படுவது நமக்கு அதிகம் பயன் தருவதாக இருக்கும்.

# அமாவாசை அஸ்தமித்தது...!

தொடர் - 2

இரணைகளுக்கு சோதனை முடிவுகள். "குண்ட, உருட்டிட்டு வந்தா தெரியும். இங்கிருந்து ராக்குளி பிரம்பால இரண்டு முதுகுலயும் உருளும். அப்பதான் ஆச்சுப் பெத்தா மல்லுக்கட்டி ஒப்பாரியா ஓதுவா".

இரணையில மற்றது, "அடிக்கிற கைதான் அணைக்கும்". "ஏய்.....! ஏய்.... ஏய்.... அடிக்கிற வானம் பொளியும், இறைக்கிற கிணரே சுரக்கும். அடிக்கிற கைதான் அணைக்கும். மற்றது ஊமக்கிளாத்தி என்று சொல்லுவாறு அப்பா. ஒண்ணும் சோட போனது என்று சொல்லுறதுக்கில்ல. சும்மாவா சொன்னாங்க, 'விளாத்தி வேரோடி முளைத்தாலும் கரு வழி தப்பாது' என்று. ஏன் ஆச்சுப் பெத்தாவுக்கு கதைக்க தெரியாதுதானே!". சீனியையும், கோப்பியையும், தகர டப்பாவுக்குள் போட்டுட்டு, சீனி சுத்தி வந்த பேப்பரை அதிலுள்ள நெளிவு சுளிவுகளை, நிமிர்த்திக்கொண்டு, திண்ணையில் உட்கார்ந்தவாறு அல்போன்ஸியாவும், பேப்பரை வாசிப்பதற்கு தெருவிளக்கில் படிக்க



அ. குமார் கொறேயிரா

ஆரம்பித்தாள். "அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் படித்தாற்போல..." வர்ணம் போட்ட புத்தகத் துண்டை படிக்கின்றாள். திண்ணையிலே கிடந்தவாறு. "சற்றும் மனந் தளராத விக்கிரமாதித் தன் மரத்தின்மீது ஏறி அங்கு தொங்கும் உடலைக் கீழே வீழ்த்தி, அதனைச் சுமந்து கொண்டு மயானத்தை நோக்கிச் செல்லுகை யிலே, ஆந்தையும், வௌவாலும் அலறுகிற நேரம் பூதங்களும், பேய்களும் பல் இளிக்க "கார்த்திகை மாதம் இரண்டாந் திகதியை நினைவூட்டிச் செல்லுமாப்போல, வெள்ளையடிக்கப்பட்ட கல்ல றைகளும், பூமாலைகளும் கிடக்க மற்றுமொறு மயானத்தை ஊடறுத்துக்கொண்டு போகும்போது, மற்றுமொன்றில் உள்ள கல்லறையில் கனிவாய்க் கசிந்த கல்வெட்டானது, "என் மீது போடும் மண் காய மட்டுமாவது மறுமணம் முடியாதே!" என்றும், சற்றுத் தள்ளி இன்னுமொன்றிலுள்ள கல்வெட்டில் பாசியும் படற மறுக்குமாற்போல எழுதிய வாசகத்தினால் அகோரமாயிருந்தன. மகாராணியார் மார்பு தட்டி, திமிராக, பெருமித மடைந்தவளாக, மகாராஜா முற்றும் துறந்த துறவியாக பதவி துறந்ததை முன்னிட்டுக் களம் கொட்டி, அதிகாரிகளின் ஆணவச் சிரிப்பு சிரிக்கின்றாள். அடங்கி நடப்பவனின் அசட்டுச் சிரிப்பாய் அரசர் ராணியிடம் கேட்டார், "குதிரைக்காரன் எப்போது துறவியாவது" என்று கேட்கிறதாயிருந்தது வாசகம். சுடலை ஞானம் எப்படியெல்லாம் வர்ணிக்கிறார்கள், வதைக்கி றார்கள் என்று பாருங்கள். மயானக் கடவாயிலில் உள்ள, கல்லறையில் வடி வமே உயிர் பெற்றதாய் உணர்ச்சிவசமான வாக்கிய மாய் நெஞ்சை உறுத்தியது வாசிப்பவர்களுக்கு. இளவரசர் மாறுவேடமேந்தி வீதி உலா வருகிறார். பையன் ஒருவன் கையிலே கவனோடு நிற்கின்றான். அவனிடம் கர்வமாக 'நீ! என் ஜாடையாய் இருக்கிறாயே! உன் அப்பா என் அவையிலே குதிரைக்காரனாகவா இருந்தவர்? மறுமொழியாக, "எனது தாயார்

பெரிய அவையிலேயே நத்தகியாக இருந்தார்" என்றான். மனதைத் தேற்றிக்கொண்டு மறுவழி சென்றார்.

திருமுழுக்கு யோவானும் (மத்தேயு 14:3-11) ஏரோதைப் பார்த்து நீ உன் சகோதரன் பிலிப்புவின் மனைவியை வைத்திருப்பது முறையல்ல என்றுரைக்க, ஏரோதியாள் சந்தர்ப்பம் பார்த்து சிரத்சேதம் செய்ய வைத்து முழுங்கினாள். பெரிய ஏரோதுவும் சின்ன ஏரோதுவும். செயற்பாடுகள் ஒன்றே! மது, மாது, கொலை, கொலை வெறியர்களே! "ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே" மதுரை மாநகரம், இலங்காபுரி, சோதோன் கொமாறா எரிந்தது யாரால?

"ஏன்னே சொல்லுற! பள்ளிக்குக் கொண்டு போய் விடுறன்தானே! ஒரு புதுசா டீச்சர் வந்திருக்காவாம். அவட முகத்த நான் பார்த்தது இல்ல. இது குறு குறுப்பா பார்த்து இருக்கு. அது சொல்லுது, 'அவட முகத்தில கறுப்பு மறு இருக்கு. அவக்கு நல்லாத்தான் அழகாய் இருக்குது அப்பா' போய்ச்சேடங்காட்டியும் வழி நீளத்துக்கும் கொட்டித்தானே வருவாள்". "அவவா? மங்களநாயகம் புள்ளையாக்கும், அது எங்கட வழி சொந்தக்காரிதானேடா! அவங்கடா வெளிநாடு போன என்று சொன்னவங்கடா பேரா! ஒன்னே பிள்ளைகள் போயிருக்கும், அவ அரசாங்க "சோதனைக்காக" இந்தக் காலத்தில பாடசாலைகள் பார்க்க வாரவ போல இருக்குனே! இந்த இரணை சும்மா ஆளு எண்டா நினைச்சா ஊந்து போற அட்டைக்கு எத்தனை கால் என்று சொல்லுவாள். ஒண்ணு ஊமக் கிழாத்தி மற்றது விடுப்பு பார்க்கிற கூடத்தாண்டா என்ன?". "அப்பாவும், ஆச்சுப் பெத்தாவும், காலையில அரிச்சனையோட. காலைப்பதிப்புமாய், ஆரம்பிச்சுட்டாங்களா....? போங்கடி .... போங்க அம்மனே! ஆச்சுப் பெத்தா போட்டு வாரேன்". இரணை சொல்லுது "ஐயம் கொயிங் ஸ்கூள்".

"இப்பதான் கதைச்சோம். ஆச்சுப் பெத்தாவும் சும்மா ஆளா? நல்ல வேளை இங்கிளிஸ் வாத்தியார் "லீயோறோச்சடிவாஸ்" பெயரைக் காப்பாத்திட்டாள்" அல்போன்ஸியாவும் கூறினாள். மற்றவளும் தமிழ் வாத்தியார், சைவப் புலவர் விபுணசேகரம் ஐயா, தமிழும், தமிழ் இலக்கியமும் வித்துவான்தான். இந்த நேரத்தில ஆசானை நினைக்கத்தான் வேணும். கொம்பு சுளி கோணாமல் கொண்ட பந்தி மாறாமல் தம்பி எழுதினால், சோறு உண்டு" இப்பயும் அங்காடியில் கண்டாரெண்டால், காதக் கடிச்ச மாதிரி கொஞ்சம் ஊண்டிப் படிக்கமாட்டேன் எண்டுதான் போவாரு. எங்க போனாலும் 'வெள்ளைக்கு' கள்ளமில்லையென்பார்கள். வெள்ள வேட்டிதான். ஆனால், வெள்ள வேட்டிக் கள்ளன் இல்லை இவர். நாட்டுக்குள்ள, சாலையில, வெள்ள வேட்டிக் கள்ளன் நடமாடுறான்தான், இல்ல என்று சொல்றதுக்கில்ல. லோறன்சும் தனது தொழிலுக்கான சோலியோ பையை தூக்கித் தோள்ள போட்டுக்கொண்டு, கொல்லனாற்றுப் பாலத்துக்கு மேலால ஓரமாக 'நானே நல்லாயன்' என்னமாப் போல முன்னே செல்வார். ஜக்கம்மா மாமிட ஒரு சின்ன பள்ளிக்கூடப் பிள்ளைகளாட்டம் பின்னாடி செல்வார்கள். தலைவாயிலில் சட்டம்பியார் வெண்காயமேடையை நாய் உழக்கியதை கண்ணால மேய்ந்து கொண்டு நிற்கின்றார். வணக்கம் ஐயா! சொல்லிவிட்டு பிள்ளைகளுக்கும் சிலுவை அடையாளம் போட்டு போகச்சொல்லி விட்டுத் தொழில் செய்யும் கடையடிக்கு வந்து, பூக்கம்பாளையால் முத்தத்தை ஒரு தட்டு தட்டி விட்டு, 'ஆசிநீர்த் தண்ணீர்' தெளித்துவிட்டு, பட்டறையிலிருந்து குத்து ஊசியை எண்ணெய்க் கல்லில் நீட்டுகிறான் செம்படவன் சேகு. "பாலத்தில் கத்தி நீட்ட வந்தவன் எங்க! அலாவுதீனும் நாற்பது திருடர்களும்", "தலைவர்! அலாவுதீன்கள்தானே நாட்டே ஆளுறாங்களே", சிகையலங்காரச் சின்னவனும், "தலைவர் - வணக்கம் சொல்லுரேங்க", "ஆமாங்க வணக்கம் சொல்லுறதே! சொணக்கமாயு இருக்குதுலா, இரவுல அடிச்சிங்களே முறிஞ்சிடல்லயா?" 'செய்யும் தொழிலே தெய்வம்' என எண்ணுபவன் சைக்கிள் திருத்துநர் நிஷாத். "தலைவர் அசலாமு அலைக்கும்". லோறன்ஸ்சும், பிதா, சுதன் போட்டமாதிரி போட்டுக்கொண்டு "அலைக்கும் இஸ்லாம்" என்றான். எவருக்கும் பாதகமுமில்லை, பாகுபாடுமில்லை, எங்க ஆசமணி அசையாமணி அவர் சுவாமிக்கு வெள்ளை அடிக்கிறார். வாரதும் பெருநாள் காலம்தானே! சேகு. தலைவர் செல்வராசன் வாரான்.... – தொடரும் ....

# தோல்விகளையும், துன்பங்களையும் வெற்றியாக்க வழி...



**"வெற்றியும் தோல்வியும் வீரனுக்கழகு"** என்றார் ஒரு விவேகியான அறிஞர்.

வெற்றி என்பது மிக இலகுவாகப் பெறக்கூடிய ஒன்றல்ல. தோல்விகளும் வரலாம், தடங்கல்களும் வரலாம், சவால்களும் வரலாம், பொறாமைப் பொறிகளும் தாக்கலாம், தீய விமர்சனங்களும் உன்னை வேதனைக் களத்திற் தள்ளிவிடலாம்.

எதிரிகளின் மறைமுகமான சூழ்ச்சிகளும் உனது வெற்றிகளைத் தவிடு பொடியாக்கலாம். உனது உற்றார் உறவினர்களே உனது முன்னேற்றத்தை வெட்டி வீழ்த்தும் கோடரிப் பிடிகளாக மாறலாம். "எல்லாமே தோற்று விட்டதே, எல்லாருமே என்னை ஒட்டு மொத்தமாக ஏமாற்றிவிட்டார்களே" என்று மனம் தளரும்போதும் நிச்சயம் நிவாரணம் உண்டு.

தோல்விகள், கவலைகள், விரக்திகள், அவமானங்கள், வீழ்ச்சிகள், மன அழுத்தம் காரணமாக ஏற்பட்ட இன்னோரன்ன நோய்கள், வறுமை எதுவாக இருந்தாலும் சரி, இந்த நிவாரணி நிச்சயம் குணப்படுத்திவிடும்.

வேறு முறைகள் உங்கள் தொல்லைகளுக்கு நிவாரணம் அளிக்கத் தவறிவிடும்போது இது நிச்சயமாகக் கைகொடுத்துத் தூக்கி விடுகிறது. தேவையான எந்த நேரத்திலும் நீங்கள் பயன்படுத்தலாம். இதைப் பயன்படுத்திப் பல இலட்சம்பேர் பயனடைந்திருக்கிறார்கள்.

நீங்களும் எல்லாமே தோற்று இருளாகக் காட்சியளிக்கும்போது கூட முழுநம்பிக்கையுடன் எழுந்து நில்லுங்கள். "எனக்கு நான் இருக்கிறேன். என்னால் நிச்சயம் முடியும்" என்று மார் தட்டுங்கள்.

உங்கள் இறுதி ஆயுதத்தைக் கையில் எடுங்கள். "ஆம்" அதுதான் "கடின உழைப்பு" உங்கள் கடின உழைப்பின் பயனை உறிஞ்சும் அட்டைகளும் உண்டு. அவதானமாக விழிப்புணர்வுடன் செயற்படுங்கள். எடுத்துக்காட்டுகள் பலவற்றை ஆழ்ந்து அவதானிப்போமா?

முதலில் தோல்வியில் ஆரம்பிப்போமே. வெறும் தோல்விகளை மட்டுமல்ல, உலகில் வேறு எவரையும் விடத் தோல்விமேல், தோல்விகளையே எதிர்நோக்கிய மனிதரையே முதலிற் காணப்போகிறோம். அவர் வேறு யாருமல்ல, மின்குமிழால் இரவைக் கூடப் பகலாக்கிய தோமஸ் அல்வா எடிசன். வேறு எவரையும் விட அதிகமான தோல்விகளைச் சந்தித்தவர் அவர். மற்ற எவரையும் விட அதிகமான முயற்சிகளையும் செய்து சாதனை படைத்தவரும் அவரே. சுருங்கக் கூறின் தோல்விகளாற் புடமிடப்பட்ட ஆமதையே அவர். மற்றவர்களை விட அதிக வெற்றிகளைப் பெற்றவரும் அவரே. ஒரு நாளைக்குப் பதினெட்டு மணித்தியாலங்கள் உழைத்தவர். 1093 கண்டுபிடிப்புகளுக்கு உரிமைகள் பெற்றிருந்தார். இவையே அவரது வெற்றிகளின் சான்றுகளாகும். இவரது மேதா விலாசத்தின் இரகசியம் 99% உழைப்பு, 1% உற்சாகம் என்று தன் வாழ்நாளை அமைத்துக்கொண்டவர் என்பதே. 18 மணிநேர உழைப்பை மேற்கொண்டவரின் முயற்சியால் நிக்கல், இரும்பு, ஸ்டோரேஜ் பற்றரியை உருவாக்கப் பத்தாண்டுகள் எடுத்ததாம். பெரிய அளவில் பிசினைத் தயாரிக்க எந்தத் தாவரம் பயன்படும் என்பதைக் கண்டறிய பதினேழாயிரம் வகையான தாவர வகைகள் மீது சோதனைகளை நடத்தி இருக்கிறார்.

கடின உழைப்பு உங்களுடைய சகல கவலைகளையும் போக்கி விடும் நிவாரணி. கடின உழைப்பில் ஆழ்ந்து மூழ்கும்போது கவலைப்படுவதற்கு உங்களுக்கு எங்கே நேரம் கிடைக்கப்போகிறது? இவருக்குப் பாடசாலையில் முறைசார் கல்வியைப் பெற முடியவில்லை. தாயாரின் உதவியுடன் வீட்டிலிருந்தே பாடங்களைக் கற்றார். எடிசனுக்குச் சிறுவயதிலேயே குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு ஏற்பட்டதால் புகைவண்டிகளில் பத்திரிகைகளை விற்றுப் பணமீட்டினார். தனது ஓய்வுநேரங்களை ஆராய்ச்சிகளிலும் செலவிட்டார். பின்பு தானே பத்திரிகையை வெளியிட எண்ணி புகைவண்டி அறை ஒன்றைப் பெற்று அச்சிட்டு வெளியிட்டார். ஓடும் புகையிரதத்தில் வெளியிடப்பட்ட முதற் பத்திரிகை இதுவாகும். இதன் பெயர் "வீக்லி கொரால்ட்". இப் பத்திரிகையை வெளியிடும்போது அவருக்கு வயது பதினைந்தாகும்.

ஒருநாள் திரவம் ஒன்று தட்டுப்பட்டு ஊற்றியதால், புகையிரதப் பெட்டி தீக்கிரையானதைத் தொடர்ந்து, அதிகாரியால் எடிசன் வெளியேற்றப்பட்டார். பின்பு புகைவண்டி நிலையத்திலும், தந்தி அலுவலகத்திலும் தொழில் வாய்ப்புகள் கிடைத்தன. தொடர்ந்தும் பல கண்டுபிடிப்பு முயற்சிகளில் ஈடுபட்டார். மின்குமிழைக் கண்டுபிடித்தபோது எடிசனுக்கு வயது முப்பதாகும். 1882ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4ம் திகதி நியூயோர்க் நகரம் மின்விளக்கொளியால் பிரகாசித்தது. அமெரிக்கப் பத்திரிகையாளர்கள் அவரை "மென்லோ பூங்கா மந்திரவாதி" என்று வர்ணித்தார்கள்.

**கடின உழைப்பின் விளைவுகள் :**

- சாதனை படைக்க வைத்து, அதிக வருவாயையும், பேரையும் புகழையும் பெற்றுத்தரும்.
- கவலைப்பட நேரமில்லாது போகும்.
- உடலும், உள்ளமும் களைத்துள்ளதால், உடனடியாகவே தூக்கம் வந்துவிடும்.
- உடல் உறுதியும், புத்திசாலித்தனமும் கூடும். பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடும். சோம்பலும், அவ நம்பிக்கையும் நோயும் தோற்றோடும்.

பிரச்சினைகளை மட்டுமே மீள, மீள அசை போட்ட ஒருவன் அதிகமாகக் கவலைப்பட்ட போது, அவன் அதைரியம் அடைந்து தற்கொலை செய்யத் தீர்மானித்தான். இந்த முடிவை யாருமே அறியக்கூடாது என்று எண்ணினான். மாரடைப்பை ஏற்படுத்தி இறக்க விரும்பியவன் வீட்டைச் சுற்றிச் சுற்றி ஓட ஆரம்பித்தான். விடாது ஓடிக்கொண்டிருந்தவன் களைப்புற்று ஒரு இடத்திற்குப் போய் இருக்கவே ஆழ்ந்த நித்திரையில் மூழ்கிப்போனான்.

நித்திரைவிட்டு எழுந்ததும் புத்துணர்வுடன் காணப்பட்டான். எந்தப் பிரச்சினைக்கும் முகங்கொடுக்கும் திறன் அவனிடம் காணப்பட்டது. வறுமையை ஓட்டவும், தலைநிமிர்ந்து வாழவும் கடின உழைப்பே கண்கண்ட மருந்து. உலகப் பெரும் கோடீஸ்வரரான "போர்ட்" கார் உற்பத்தியாளர் ஹென்றிபோட் கூட வாரத்திற்கு இரண்டரை டொலர் சம்பளத்திற்தான் வாழ்க்கையை ஆரம்பித்தார். இன்று உலகப் பணக்காரராகக் கொடிகட்டிப் பறக்கும் "பில் கேட்ஸ்" கூடப் பாடசாலைக் காலத்தில் அனைவராலும் "நாற்றம்" என்று நையாண்டி செய்யப் பட்டவர்தான்.

கணினியின் வின்டோசைக் கண்டு பிடித்துக் கடின உழைப்பால் உலகப் பணக்காரரானார். பதினான்கு வருடங்கள் தொடர்ந்து உலகப் பணக்காரராகச் சாதனை படைத்தார். ஆகாய விமானத்தைக் கண்டுபிடித்த வில்பர் ரைட் சகோதரர்களின் முதல் முயற்சி தோல்வியிலேயே கழிந்தது. எட்டு ஆண்டுகள் தீவிர உழைப்பால் தோல்வியைச் சாதனையாக்கி வெற்றியும் கண்டார்கள்.

சிரிப்பின் வழியே சிந்தனையைத் தூண்டும் ஆற்றல் பெற்ற சிரிப்பு நடிகர் "சார்லி சாப்ளின்" கூடச் சிறு வயதில் வறுமையின் கொடுமையில் வாடியவர்தான். நாடகக் குழுவொன்றில் சிறு வயதில் பணியாற்றத் தொடங்கியவர். தனது சோர்விலா உழைப்பால் சாதனைகள் பல படைத்தார்.


உலகிலேயே மிகப் பெரிய இராஜ தந்திரியான சாணக்கியர் கூட எளிய அந்தணர் குடும்பத்திற் பிறந்தவர்தான். "அர்த்த சாஸ்திரம்" என்ற சாணக்கிய நீதி நூலை எழுதிச் சாதனை படைத்த

நெஞ்சழுத்தக்காரர்தான். ஓயாத உழைப்பால் தோல்விகளைத் தோற்கடித்த ராஜதந்திரியாவார்.

சிறையில் வாடிய சிந்தனைப் பறவை நெல்சன் மண்டேலா கூட, சிறு வயதிலேயே தந்தையை இழந்தவர்தான். படிப்பதுடன், ஆடு, மாடு மேய்க்கும் வேலையையும் செய்தார். ஆனாலும், கடும் உழைப்பால் உயர்நிலைப் படிப்பைச் சிறப்பாக முடித்தார். விடாத உழைப்பால் குடியர சுத் தலைவரானார். ராப்பென்தீவில் கடுமை யான காவலில் 27 ஆண்டுகள் சிறைவாசம் அனுப வித்தவர் என்பது குறிப்பிடத்தக்கதே.

ரஷ்ய நாட்டின் சர்வாதிகாரயான ஸ்டார்லின் கூட ஒரு செருப்புத் தைக்கும் செம்மானின் மகன்தான். ஸ்டார்லினும் ஆரம்பத்தில் செருப் புகளைப் பழுது பார்த்துப் புதுப்பிக்கும் தொழி லையே செய்து வந்தார். இவரது உயர்வின் இரகசியமும் உழைப்பே.

“கெலன் கெல்லர்” என்ற பிரசித்திபெற்ற ஆங்கில எழுத்தாளர் காதுகேளாது, பார்க்க முடியாது, பேச்சாற்றலும் இல்லாதவர். குத்தெழுத்தைப் பழகிய பின்பு கடின உழைப்பால் சரித்திர நாயகியானார்.


கலாபம் நற்பணி மன்றம்
කලාපම් සුභසාධක සංගමය
KALAPAM WELFARE ASSOCIATION

ஆயிரக்கணக்கானோரின் அயராத உழைப்பு தான், இன்று ஆயிரக்கணக்கான கண்டுபிடிப்புக் களை எமக்குத் தந்துள்ளது. “இரண்டு கைகளு டன் பிறக்கும் மனிதன் ஒரு வாயுடன் மட்டுமே பிறக்கிறான்”. எப்பொதுமே, உழைப்பு முக்கிய மானது என்பதை இது வலியுறுத்துகிறது.

இன்றே துணிவுடன் எழுந்து நில்லுங்கள். ஒரு நாளைக்குப் பன்னிரெண்டு மணித்தியாலங்கள் உழையுங்கள். அதன்பின்பு தான் வாழ்வின் உயர்ச்சியின் இரகசியத்தை நன்கு இனங் காணுவீர்கள்.

**“துணிந்து நில்! துணிந்து செல்!**

**தோல்வி கிடையாது தம்பி”**

– கலாபூஷணம் வயலற் சரோஜா

## கிறிஸ்து பிறப்பு விழா சிறப்புப் போட்டி விடைகள்

**சரியான விடைகள்**

1. திருத்தந்தை பிரான்சிஸ் - 2013 நவம்பர் 24
2. “டைம்” வார இதழ் - (Time Magazine)
3. 23ம் யோவான் 1962
   2ம் யோவான் பவுல் 1994
4. 3000
5. நீரோ பேரரசன்
6. பதினாறாம் பெனடிக்ட் 2005 ஏப்ரல் 19
7. 1962-1965
8. பாப்பரசர் 23ம் அருளப்பர்
   6ம் சின்னப்பர்
9. முகமது அலி அட்கா / துருக்கி
10. புனித ஸ்தேவான் - கல்லால் எறிந்து
11. புனித தோமா - ஈட்டியால் குத்தப்பட்டு
12. யோவான் - எபேசு நகரில்

**பரிசு பெறுபவர்கள்:**

1st பரிசு: ரா அர்ச்சனா, சொமஸ்கன் மியானி நகர் (S.R) தன்னாமுனை.

2nd பரிசு: G. ஆன மலஷா 18 K.பனிச்சையடி, மட்டக்களப்பு.

3rd பரிசு: கீத் செலர், இல. K.09, பனிச்சையடி, மட்டக்களப்பு.

**மாணவர் பக்கம் தொடர்....**

... விளைவுகள் பற்றி அதிக கவனம் செலுத்தி வருகிறது. மக்கள் தம் கடமைகளை உணர்ந்து செயல்பட்டு வருகின்றது. இவ்வாறாக வத்திக்கான் சங்கத்தின் சமூப் படிப்பினைகளின் தாக்கம் இலங்கை சமூகத்தில் அதிக தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளதைக் காண முடிகின்றது.

# பெருமை

சிறுகதை

வழமைபோல் காலை வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தேன்.

"மம்மி, மம்மி ஓடி வாங்க. என்னைக் காகம் எல்லாம் கொத்தப் பாக்குது. கெதியா ஓடி வாங்க...." என்று எனது சிறிய மகள் கூப்பிட்டாள். "ஏன் கத்துறா ஆ... வேலையா இருக்கிறன் பொறு வாரன்" என்று கூறி என் வேலையை முடிக்கு முன்னே மகள் என்னருகில் வந்து, "கூப்பிட்டா வரமாட்டீங்களா? அங்க வந்து பாருங்க. ஒரு காகம் செத்துக் கிடக்குது. அதால அந்த இடத்துல இருந்து உடுப்பு கழுவ ஏலாம இருக்கு" என்றாள்.

"ஆ... பொறு நான் போய்ப் பாக்குறன்...." என்று சொல்லிவிட்டுப் போய் பார்த்தேன். தென்னை மரத்தின் கீழே ஒரு அளவான காக்கை குஞ்சு செத்துக் கிடந்தது. அதன் மேலே பல காகங்கள் சுற்றிக் கத்திக் கொண்டிருந்தன. காகம் எல்லாம் போகட்டும் என்று மீண்டுமாக வீட்டிற்குள் வந்து விட்டேன். இரண்டு மணிநேரம் கழித்து வானொலியைப் போட்டேன். பழைய பாடல் என்றால் எனக்குப் பிரியம்தான். அந்நேரம் பார்த்து 'ஒன்னா இருக்கக் கத்துக்கணும், இந்த உண்மையச் சொன்னா ஒத்துக்கணும். காக்கா கூட்டத்தப் பாருங்க, அதுக்குக் கத்துக் கொடுத்தது யாருங்க....' என்ற பாடல் ஒலித்தபோது தான் இறந்த காகத்தின் நினைவு வந்தது. 'உண்மைதான். இந்தக் காகம் எல்லாம் எப்படி ஒண்டாக் கூடிட்டுதுகள். இந்தப் பாட்டுல வந்தமாதிரி எவ்வளவு ஒத்துமையா இருக்குதுகள்' என்று எண்ணிக் கொண்டே காகம் கிடந்த இடத்திற்குச் சென்றேன். ஒரு மாதிரியான துர்நாற்றம் வந்தது. அப்போது, "நான் கிளாசுக்குப் போறன். கெதியா அத தாழுங்க" என்றபடி சின்ன மகள் வகுப்பிற்குச் சென்றாள்.

மெதுவாகப் பக்கத்தில் கிடந்த டிசு பாக்கை எடுத்து என் வலது கையில் போட்டுக் கொண்டு மூக்கை மறு கையால் பொத்திக் கொண்டு காகத்தின் காலைப் பிடித்து தூக்கிக் கொண்டு சென்று வாசலில் நின்று மெதுவாகக் கதவைத் திறந்து வீதியை எட்டிப் பார்த்தேன். வீதியிலே ஒருவரும் இல்லை. பட்டென வெளியே சென்று எனது மதிலை விட்டு அடுத்த பக்கம் தூக்கி எறிந்தேன். காகங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து கத்திக் கொண்டே அங்கும் இங்கும் பறந்தன. ஓடிவந்து கதவைப் பூட்டிவிட்டுக் கையைக் கழுவிவிட்டு, அப்பாடா...." என்று பெருமூச்சு விட்டு ஏதோ சாதித்தது போல் பெருமைப் பட்டேன்.

ஒரு மணி நேரம் கழிந்தது. என் கணவர் துணியை வெட்டிக் கொண்டிருந்தார். ஏனென்றால் அவர் தையற்காரர். நான் அவருக்குத்



தேநீரை வழங்கி விட்டு "ஏனப்பா, ஒரு புதினம். ஒரு காகம் அவடத்த செத்துக் கிடந்தது. அத மெதுவா எடுத்து ரோட்டில எறிஞ்சிட்டன்" என்றேன்.

"என்னது ரோட்டிலயா... ஏன் அத வெட்டித் தாக்கேலாதா....? இப்படியும் செய்றதா....? அத இப்ப நாய் இழுத்துத் திரியும். ஏன் உங்களுக்கு இந்தக் கூடாத வேல? வச்சிருந்தா நான் தாட்டிருப்பன்" என்று பேசிவிட்டுக் குளிக்கச் சென்றார்.

அந்நேரம் பார்த்து எனது மகன் வகுப்பு முடிந்து வந்தான். "என்ன மம்மி ஏதோ நாத்தம்

வருது. ஏதும் செத்துக் கிடக்குதா?" என்று கேட்க, நான் "உனக்கு என்ன வேணும் குடிக்க..." என்றேன். "ஏதாவது பழம் இருந்தா ஜூஸ் அடிச்சுத் தாங்க...." என்றான். நானும் விளாம்பழம் ஜூசைக் கையில் கொடுத்துவிட்டு நமட்டுச் சிரிப்புடன் "அது தம்பி ஒரு காகம் செத்துக் கிடந்தது. அத நான் எடுத்து கிறவல் ரோட்டில எறிஞ்சனான். அதான் நேரஞ் செல்லச் செல்ல நாத்தம் அடிக்குது...." என்றேன். "என்ன மம்மி உங்கட வேல, டடா ஏசல்லியா உங்களுக்கு. ஜூசை அப்பிடியே வைங்க.... வச்சிட்டு மம்பட்டி இருந்தா எடுங்க...." என்றான். "தேவல்ல தம்பி அத நாய் திண்டிடும். இல்லாட்டி நாத்தம் தாங்காம பக்கத்து வீட்டுக்காரங்க வெட்டித் தாப்பாங்க. சும்மா விட்டுட்டு இதக் குடி ..." என்றேன்.

"மம்பட்டியத் தாங்க நான் தாக்குறன் ..." என்று கூறி வீதிக்குச் சென்றான். நான் ஓடிப்போய் மண்வெட்டிய எடுத்துக் கொடுத்தன். உடனே மதிலோறம் மடுவை வெட்டிய மகனிடம், "போதும் போதும் தாழு ..." என்றேன்.

"இல்ல மம்மீ ஆழமாத் தாட்டாதான் மணம் வராது. நாயும் தோண்டாது" என்று ஆழமாக மடுவை வெட்டி நாறிய காகத்தை எடுத்துத் தாட்டுவிட்டு மண்ணைச் சமப்படுத்தி விட்டு வந்து கை, காலைக் கழுவி விட்டு "இனிமேல் இப்படிச் செய்யாதீங்க மம்மீ" என்று கூறினான்.

அப்போது, 'சிறுவர் தினத்தை' முன்னிட்டு திருப்பலியில் பங்குத்தந்தை ஆற்றிய மறையுரை நினைவுக்கு வந்தது. "பெற்றோர்களே உங்கள் பிள்ளைகள் புலமைப் பரீட்சையில் சித்திபெறுவதும், 9 A எடுப்பதும், 4 A எடுப்பதும்தான் பெருமை என நினைக்காதீர்கள். அவர்கள் குடும்பத்தினருக்காகவும், அயலவர்களுக்காகவும், சமுதாயத்திற்காகவும் எவ்வளவோ செயல்கள் செய்கிறார்கள். அதை நீங்கள் அறிந்தும் அறியாதவர்கள் போலிருக்கின்றீர்கள். அவர்கள் மட்டில் பெருமை அடையுங்கள். அவர்களைத் தட்டிக் கொடுத்து ஊக்கப்படுத்துங்கள்" என்று கூறியது என் எண்ணத்தில் ஓடியது. 'ஓ அவர் அன்று சொன்னது இன்று எனக்கே சொன்னது போலிருக்கிறது. என்று நினைத்துக்கொண்டு என் மகன் மட்டில் மிக மிகப் பெருமைப்பட்டேன். "ஆண்டவரே இதேபோல் என் பிள்ளைகளை நல்லவர்களாக வளர உதவியருளும். நான் செய்த பிழையான காரியத்திற்காக என்னை மன்னியும்" என மன்றாடிவிட்டு வீட்டிற்குள் சென்றேன்.

என்னைக் கண்டவுடன் என் கணவரும், மகனும் கிண்டலாகச் சிரிப்பதைப் பார்க்க வெட்கம் வந்தது. "சரி சரி இனி நான் இப்படிச் செய்ய மாட்டேன்" என்று சொல்லிக் கொண்டு மீதி வேலைகளில் ஈடுபடத் தொடங்கினேன்.

## எண்ணிப்பார்க்கையில்...

### தவறான தெரிவுகள்

வாழ்வில் தவறிழைப்பதென்பது சகஜம்;
அதனால் பண்ணுகின்ற தவறுகளுக்காக
ஒருவர் வாழ்நாள் பூராவும்
வருந்தவும், உத்தரிக்கவும் வேண்டியது இல்லை!
தவறுகளிலிருந்து விடுபடவும்,
திருந்தவும் வேண்டும்.
அதுவே முக்கியம்!
சமயங்களில் நல்லவர்கள் எனப்படுபவர்களே
பிழையான தெரிவுகளை மேற்கொள்வதும் உண்டு.
அதனால் அவர்கள் பிழையானவர்கள் என்றில்லை!
அவர்கள் மனிதர்கள் அவ்வளவுதான்!!
தீர்க்கமாக எண்ணிப் பார்க்கையில் ...
தெரிவு பிழைத்து விட்டதை அறிந்தும்
அதைத் திருத்திக் கொள்ளாமல் அதை
நியாயப்படுத்த முயல்வது தான் அறிவீனம்;
தவறும் கூட என்பது புரிகிறது.
தவறு புரிந்து விட்டோமே என்று வருந்திக்
கண்ணீர் சொட்டுவதை விட
திருந்தும் வழி பார்த்து அதைக்
கைக் கொள்வதும்,
திருந்தி வாழ்வதும்தான்
நல்லவர்க்கழகு!

ஆனந்தா ஏ.ஜீ.இராஜேந்திரம்

அருட்பணி அ. அ. நவரெத்தினம் (நவாஜி)
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.



# ஆன்மீகத் தேடலும் வாழ்வும்

இன்றைய உலகில் இரைச்சலுக்கும், சந்தடிக்கும் பஞ்சமில்லை. ஆர்ப்பாட்டங்களுக்கும், ஆரவாரங்களுக்கும் குறைவில்லை. ஏமாறலுக்கும், போலிக்கும் குறையில்லை. இதனால் பலரும் உண்மையான அமைதியினை இழந்து தவிக்கின்றார்கள். போலிகளால் கவரப்பட்டு ஏமாற்றப் படுகின்றார்கள். விற்பனை உலகமும், சந்தைப் பொருளாதாரமும், அதிமீறிய நுகர்வுக் கலாசாரமும், உலகமயமாக்கலும் உண்மையினை நம்மிடமிருந்து மறைத்து விடுகின்றன. அதனால் வாழ்வில் ஏமாற்றம் மட்டுமே மிஞ்சி நிற்கின்றன. இவ்வாறான தடுமாற்றம் நிறைந்த வாழ்வில் நிம்மதியை, இழந்த அமைதியினை மீளவும் பெற்றுக்கொள்ள மனிதன் அங்கும் இங்குமாக ஓடுகின்றான். அவ்வாறு ஓடுகின்ற மனிதனும் பல போலியான ஆன்மீகத்தாலும் இலகுவாகக் கவரப்பட்டு அலைக்கழிக்கப்படுகின்றான். இன்று மனிதன் தேடுகின்ற வாழ்விற்கான ஆன்மீகம் எங்குள்ளது என்று தேடினால் பலவிடங்களில் ஏமாற்றம் மட்டுமே மிஞ்சி நிற்கின்றது. இத்தகைய சூழ்நிலையில் இன்று உண்மை ஆன்மீகமானது மனிதனுக்கு தேவையானதாக உள்ளதுடன், அதனை எங்கே, எப்படி பெற்றுக்கொள்ளலாம் என்கின்ற தேவையும் எழுந்துள்ளது.

ஓர் அரசன் தனது நிம்மதியினை இழந்து தவித்தான். தான் இழந்த நிம்மதியினை மீளவும் பெற்றுக்கொள்ளும் நோக்கில் ஒரு புதிய அறிவிப்பினை வெளியிட்டான். அதன்படி 'உண்மையான ஆன்மீகம் குறித்த சுவரோவியத்தை வரைகின்ற ஓவியருக்கு பரிசிலும் வழங்குவதாக வாக்களித்தான்.' அரச அறிவிப்பினைக் கேட்டு பல ஓவியர்களும் போட்டியில் கலந்துகொள்ள வந்திருந்தார்கள். அவர்களுக்கான இடங்களும் ஒதுக்கப்பட்டன. ஆயினும் எதுவுமே அரசன் தேடிய ஆன்மீகத்தை பிரதிபலிப்பதாக அமைந்திருக்கவில்லை. ஒரு வயதான ஓவியர் முன்வந்து 'அரசன் விரும்பிய ஆன்மீகக் கலையோவியத்தை தான் படைப்பதாகக் கூறினார். ஆயினும் தனக்கு ஒதுக்கப்படுகின்ற இடத்தில் தன்னைத்தவிர யாரும் இருக்கக் கூடாது' என்கின்ற கண்டிப்பான கட்டளையையும் முன்வைத்தார். அவர் கேட்டதற்கு இணங்க தனிமையான ஓர் இடம் அவருக்கென ஒதுக்கப்பட்டது. அங்கு அவரைத் தவிர வேறு எவரும் நுழைவதற்கான அனுமதியும் மறுக்கப்பட்டது. அவரும் ஆன்மீகம் ததும்பும் தமது கலையோவியத்தைத் தீட்டத் தொடங்கினார். ஓவியமும் வரைந்தாகி விட்டது. இப்போது அரசனுக்கு அழைப்பு விடப்படுகின்றது. அரசனும் ஓவியத்தை பார்வையிடுவதற்காக வருகை தருகின்றார்.

அரசனும், ஓவியருமாக சுவர்ச் சித்திரம் வரையப்பட்ட அறையினுள் நுழைகின்றார்கள். அங்கே நுழைந்து வரையப்பட்ட ஓவியத்தினை பார்த்த மாத்திரத்திலேயே அரசன் சொக்கித்

துப் போனான். அவனுக்கு வார்த்தைகள் வர வில்லை. அதுவொரு அழகிய இயற்கைக் காட்சி யினைப் பிரதிபலிக்கின்ற ஓவியம். ஒரு பக்கம் அடர்ந்த காடு, காட்டிற்கு பின்பிறமாக அழகான மலைத் தொடர் ஒன்று அறை முழுவதுமாக பரவியிருந்தது. காட்டிற்கு முன்னால் ரம்மியமான அருவி ஒன்று ஓடிக்கொண்டிருக்கிறது. அருவி யின் வாயில் ஓரங்களில் மிருகங்கள் தண்ணீர் அருந்துவதும், மேய்ச்சலில் ஈடுபடுவதுமாக இருந்தன. அருவியின் அருகே அழகான வளைந்து நெளிந்து செல்கின்ற ஒற்றையடிப் பாதையொன்று காட்டினை ஊடறுத்து முடி விலியாகச் சென்று கொண்டிருக்கின்றது. அப்போது அரசன் ஓவியரைப் பாராட்டி "அந்த ஒற்றையடிப் பாதை எங்கு செல்கின்றது" என் கின்ற கேள்வியினை எழுப்பினார். ஓவியரும் பதிலுக்கு "தெரியாது, வாரும் இருவரும் சேர்ந்து பயணித்து பார்ப்போம்" என்றார். இருவரும் ஒருசேர பயணிக்க ஆரம்பித்தனர். இதுவல்லவா உண்மை ஆன்மீகம்.

ஆம், உண்மை ஆன்மீகமென்பது தேடல் நிறைந்த வாழ்வாகும். தாகம் உள்ளவரைக்கும்தான் தேடல் இருக்கும். இயேசு கூறுவார்: "யாரேனும் தாகமாயிருந்தால் என்னிடம் வரட்டும். என்னி டம் நம்பிக்கை கொள்வோர் பருகட்டும்" (யோவான் 7:37). நாம் ஆன்மீகத்தின்மீது கொள்கின்ற தாகமானது நமக்குள் ஓர் ஏக் கத்தை, அங்கலாயிப்பினை, பரிதவிப்பினை, தேடலினை தோற்றுவிக்கின்றது. அதுவே உண்மையான தேடலாக மாறுகின்றது. அந்தத் தேடலில் சோர்விருக்காது, களைப்பிருக்காது, ஓய்விருக்காது, தளர்ச்சியிருக்காது. விவிலியப் புத்தகத்தின் திருப்பாடல் நூலில் பின்வரும் பகுதியினைப் படிக்கலாம்: "கலைமான் நீரோடை களுக்காக ஏங்கித் தவிப்பதுபோல் கடவுளே என் நெஞ்சம் உமக்காக ஏங்கித் தவிக்கின்றது. என் நெஞ்சம் கடவுள்மீது, உயிருள்ள இறைவன்மீது தாகம் கொண்டுள்ளது" (திருப்பாடல் 42:1-2). கலைமான்கள் நீரோடையினைக் கண்டு தமது தாகத்தினைத் தீர்த்துக்கொள்ளும் வரையிலும் அமைதியுறாதது போல் மனிதர்களும் ஏக்கத்து டன் தேடுகின்றபோது மட்டுமே குளிர்ந்த நீரோ டைகளைக் கண்டுகொள்ள முடியும். இதனை இன்னும் அழகாக புனித அகுஸ்தீனார் "உமக் காகப் படைக்கப்பட்ட எங்கள் ஆன்மா உம்மை வந்தடையும் வரை நிம்மதியடைவதில்லை இறைவா!" என்கிறார்.

உலகில் பலரும் பலவிதமான தேடல்களை மேற்கொண்டார்கள். மாட்டின் லூத்தர் கிங் (இளையவர்) அமெரிக்க நாட்டில் தலை விரித் தாடிய நிறவெறிக்கு எதிராகப் போராடினார். அவரது போராட்டம் அகிம்சை வழியிலான போராட்டமாகும். அவரது கனவு, இலக்கு எல்லாம் அமெரிக்க ஐக்கிய நாட்டில் வெள்ளை யரும், கறுப்பினத்தரும் சமவுரிமையுடன் வாழ வேண்டும் என்பதாகும். வெள்ளையரால் நசுக்கப் பட்ட கறுப்பின மக்களின் விடுதலைக்காக போர்க் குரல் எழுப்பினார். அவர் கண்ட கனவே அவருக்கும், அவர்வழி தொடர்ந்த கறுப்பின மக்களின் சமவுரிமை வாழ்விற்கும் வித்திட்டது. அவரது உலகப் பிரசித்திபெற்ற உரையாகிய 'எனக்கொரு கனவுண்டு' (I have a Dream) அதிலே அவர் உரைக்கும் ஒரு சில வரிகள்: "சகோதரத்துவம் எனும் மேசையில் அடிமை, எஜமானின் பிள்ளைகள் அமரும் நாள் வரு மென கனவு காண்கிறேன். நிறத்தை வைத்து மதிப்பிடாமல், நடத்தையை வைத்து மதிப்பிடும் நாட்டில் என் பிள்ளைகள் வாழ்வார்கள் என கனவு காண்கிறேன். நிறவெறி தேசத்தில் வெள்ளையர், கறுப்பின சிறுவர், சிறுமியர் கைகோர்க்கும் நாள் வருமென கனவு காண்கிறேன்" அவர் கண்ட கனவு சாதாரண கனவல்ல உன்னதமான, ஆன்மீக எழுச்சி கொண்ட கனவு, அதனாற்தான் அது கை கூடியது. கறுப்பின சிறுவர், சிறுமியர்களுக்கு வாழ்வு மலர்ந்தது.

உன்னதமானதை தேடுவோருக்கு வாழ்வில் அழிவு என்பதே கிடையாது. அவர்கள் சிந்தனை எல்லாம் உலக நிலையினைக் கடந்து ஆன்மீக எல்லையில் சஞ்சரிப்பதாகும். ஒரு பாடலின் வரிகள் இவ்வாறு சொல்கிறது: "தேடல் உள்ள உயிர்களுக்கே வாழ்வில் பிடிப்பிருக்கும்." நம் தேடல்கள் உண்மையான ஆன்மீகத் தேடல்களாக அமையட்டும். அப்போது வாழ்வில் வெற்றி நிச்சயம்.

தொடரும் மற்றுமோர் சிந்தனையுடன்....

இந்த உலகில் மனிதனுக்குத் தேவை
எல்லாம் மிகக் கொஞ்சம் தான்.
அதுவும் கொஞ்ச காலத்துக்குத்தான்.

- கோல்ட்ஸ்மித்



- அரும்பாவலர்
நிலா தமிழின்தாசன் -

# பொன்விழாவில் பூத்துப் பொலியுமெங்கள் தொண்டன்

மலர் 1 ★ 1-2-1969; ★ மட்டக்களப்பு ★

பொன்விழா மலராகப் பொலியுமெங்கள் "தொண்டன்"
புனிதமிகுந் தமிழ்மொழியால் விளங்கும் கற்கண்டன்
இன்னமுதத் தமிழாலே ஏற்றநல்ல ஆக்கம்
ஏந்தியே இதுவழங்கும் திங்கள்தொறும் ஊக்கம்
மன்பதைக்கு ஏசுசுதன் போதனைகள் ஊட்டும்
மாறாமல் நல்வாழ்வின் வழித்தடத்தைக் காட்டும்
அன்பென்னும் ஆயுதமே அரியகொடை என்றே
அமுதமொழிதனைப் பகர்ந்தே தானுழைக்கும் நின்றே

கனிவான கவிதையொடு கட்டுரைகள் வழங்கும்
காலத்துக் கேற்றபடி உறைப்போடும் முழங்கும்
மனிதமனம் மாற்றமுறக் கதைகள்குறும் பாக்கள்
மணியான வரிகள் கொண்ட கடிதமெனும் பூக்கள்
இனிதான நாவல் குறுங் காவியங்கள் கூட
ஏந்திவந்த தொண்டன் புகழ் ஒன்றிரண்டா பாட!
புனிதர்தம் வரலாறும் போற்றிவரும்மிக நலமாய்
புதிதாகத் துணுக்குகளும், குறிப்புகளும் தொடர்ந்துவரும் வலமாய்....

மட்டுநகர் மண்ணில் அரைநூறு ஆண்டுகளைக் கடந்து
மங்காமல் பணிபுரியும் தொண்டன்பணி நிலைக்கட்டும் தொடர்ந்து
எட்டுத்திசை எங்கணுமே ஏற்றிப் புகழ்ந்து பாடும் நன்றாய்
எங்கள் தொண்டன் வாழட்டும் இன்னும் பணி தொடர்ந்தே
தொட்டணைத்துச் சுவைப்போர் தொடர்வர் அதன் உறவை
தூயபணியாளன்தனைப் போற்றிவையம் அடையட்டும் மகிழ்வை
கட்டியணைத்தே மகிழ்வால் இட்டமுடன் புகழ்வோம்
கனித்தமிழாய் வாழியவே எங்களருந் தொண்டன்!

# துன்பத்தில் கரம் கொடுத்த வள்ளல்!





அருட்சகோதரி
லூர்டஸ் FMM

இன்றைய உலகைச் சுற்றிப் பார்த்தால் பலவித துன்பங்களால் துவண்டு கிடக்கும் மக்களைப் பார்த்துக் கலங்கி நிற்போர் பலர். கரம் நீட்டி உதவுவோர் சிலர். இயற்கை அனர்த்தங்களால் இல்லிடங்களை இழந்து பரிதவித்து நிற்போர் பலர். சூரிய வெப்பத்தைத் தாங்க முடியாது. தாகந் தீர்க்க இயலாது தவியாய்த் தவிக்கின்றனர் சிலர். அதுமட்டுமா, போதைவஸ்து, கடன்தொல்லை, அநீதி இவற்றால் துன்புறுவோர் பலர். வட்டிக்குக் கடன் வாங்கி வீட்டை விற்கும் அளவுக்கு அந்தரித்து நிற்போரின் சோகக் கதை கேட்டு கண்ணீர் வடிப் போர் தொகை நீடித்துக் கொண்டே போகிறது. இவர்களுக்கு உதவிபுரிவோர் தொகை மிகக் குறைவாகவே இருக்கிறது.

13ம் நூற்றாண்டில் செல்வந்தரின் மகனாகப் பிறந்த புனித பிரான்சிஸ் அசிசி, இளவயதில் இறைவனை நாடினார். ஆன்மீகத்தில் ஆழ்ந்து வளர்ந்தார். இறைவனோடு இறுகப் பிணைந்தார். இறைவனின் ஆலயம் இடிந்து போகும் நிலை யிலிருந்த தமியோன் ஆலயத்தைத் தனித்து நின்று தனக்குத் துணை புரியத் துணையாளிகளைச் சேர்த்துக் கொண்டார். களவெடுக்க வந்த கள்வர்களை நல்வழிப்படுத்தி அவர்களையும் தன்னுடன் தோழராகச் சேர்த்துக் கொண்டார். பலவித இடையூறுகள் மத்தியிலும் கரங்களில் காசின்றி அயலவரின் துணையுடன், ஆசிருடன் ஆலயத்தைக் கட்டி முடித்தார். அதுமட்டு மல்ல, பல சேவைகள் செய்தார். காரணம், அவர் இறைவனோடு கொண்டி ருந்த உறவு. வீடு வீடாகச் சென்று பணம் சேர்த்துப் பல பணிகள் புரிந்தார். அன்று தனித்து நின்று தோழர்களைத் தேடி உலக இன்பங் களால் இறைவனை மறந்து வாழ்ந்த கத் தோலிக்கத் திருச்சபை அழிந்து போகும் நிலையிலிருந்ததைப் பரிசுத்த பாப்பரசரிடம் எடுத்துரைத்தார். தனக்கென ஓர் சபையைப் பாப்பரசரது உதவியுடன் ஏற்படுத்தினார். அதுதான் பிரான்சிஸ்குவின் சபையாகும். இதன் மூலம் அழிந்து போகும் நிலையிலிருக்கும் திருச்சபையைக் கட்டியெழுப்பினார்.

இன்று நம் நாட்டில் வாழும் வாலிபர்கள் ஒன்று சேர்ந்து மக்களுக்குப் பல

பணிகள் புரியமுடியாதா? இறைபணிக் கெனத் தம்மை அர்ப்பணித்த சிலர் நம் நாட்டிலும் சிறு சேவைகள் புரிகிறார்கள். அதுபோதாது, பலர் சேர்ந்து ஒத்துழைத்து ஆன்மீகத்தில் உறைந்து இறைதுணையுடன் எம் நாட்டைத் தெய்வலோகமாக மாற்ற முடி யும். கத்தோலிக்கர் அல்லாத சகோதரர் கூட நம் நாட்டில் சேவை செய்கின்றனர். எடுத்துக் காட்டாக, எம்மைவிட்டு மறைந்த பிரேமதாச வின் மகன் சஜித் ஏழைகளுக்கு வீடுகள் கட்டிக்கொடுத்துப் பிரசித்தப்படுத்தாது பணி புரிகிறார். இவரைப் போன்று பல இளை யோர் எம் நாட்டைப் புதிய நாடாக மாற்ற முடியுமல்லவா? சிந்திப்போம். இறை பக்தி யில் வளர்வோம். ஆன்மீக வளர்ச்சியுடன் எம் அகிலத்தைப் புதுப்பிப்போம். இதுவே புனித அசிசியாரின் வழியாகும்.

■

## பூமியில் புதுமை : முன்னேறும் பயணத்தில் பின்வாங்கலாமா?

விரிந்த நீலவானம், பரந்த நீலக்கடல், கனிதரும் மரம், வீசும் தென்றல், எரியும் நெருப்பு, ஓடும் நதி என, இயற்கையின் அனைத்து அற்புதங்களும் அன்றாடம் ஆயிரம் பாடங்களை நடத்துகின்றன. பாய்ந்தோடும் நதி புகட்டும் பாடங்கள் புருவங்களை உயர்த்த வைக்கின்றன. எந்த ஒரு நதியும் பிறக்கும்போதே பிரவாகமாகப் பெருக்கெடுப்பதில்லை. பிறந்த இடத்திலேயே அது தேங்கி நின்றுவிடுவதுமில்லை. அப்படியே நின்றுவிட்டால், அது நாற்றமடிக்கும் குட்டையே தவிர, நதி அல்ல. ஒவ்வோர் அடியாக முன்னோக்கி நகர்வதே நதி வாழ்வின் வளர்ச்சி. அதேநேரம், எந்த நதியும், தானாக வளருவதில்லை. செல்லும் வழியில், நீரோடைகளும், சுனைகளும் சேர்ந்தால்தான் நதியில் வெள்ளம் பெருகி, வேகமாக ஓடும். உயர்ந்த மலையில் பிறக்கும் நதி, அருவியாக, தாழ்ந்த நிலத்தில் பாய்ந்து, உயிர்காக்கும் உணவுக்கு ஆதாரமாகிறது. அனைத்து உயிர்களையும் வாழ வைக்கிறேன் என்ற ஆணவமின்றி, கடமையைச் செய்யும் கர்ம யோகியாக, தன் பயணத்தில் எந்த இடத்திலும் இளைப்பாறாமல், தன் போக்கில் அது தளராமல் நடக்கிறது. நதியின் பாதையில், மலைகளும், மேடுகளும், மரங்களும், பாறைகளும் தடுப்புச் சுவர்களாக எதிர்த்து நிற்கின்றன. தகர்க்க முடிந்த தடைகளைத் தகர்த்து, தகர்க்க முடியாத கடின பாறைகளை எதிர்த்து மோதி, ஆற்றலைச் சிதறவிடாமல் பணிந்து கொடுத்து, சுற்றி வளைந்து, அது தன் பயணத்தைத் தொடர்கிறது. இறுதியில், தான் வாழ்ந்த வாழ்வின் நிறைவோடு, எந்தக் குறையோ, புலம்பலோ இல்லாமல், தனது தனித்துவத்தைக் கலைத்து, அமைதியாகக் கடலில் கலந்து விடுகிறது. மேலும், ஓடும் நதியில், பழைய நீரை நாம் எந்த இடத்திலும் பார்க்க முடியாது. கரையில் நின்று நாம் பாரக்கும் நீர் வேறு. குளிக்கும்போது உடம்பை வந்து தழுவும் நீர் வேறு. குளித்துக் கரையேறியபின் காணும் நீர் வேறு. எனவே, எந்தப் பயணமும் தடையில்லாமல் நடப்பதில்லை, எந்தச் சாதனையும் சோதனையில்லாமல் சாத்தியமில்லை, முன்னேறும் பயணத்தில் பின்வாங்கக் கூடாது, இலக்கை அடையும்வரை எந்த இடத்திலும் தயங்கி நிற்கக்கூடாது, தடைகளைக் கண்டு கலங்கி நிற்காமல், அவற்றைத் தயக்கமின்றி தாண்ட வேண்டும் என்பன போன்ற வாழ்வுப் பாடங்களை நதி என்ற ஆசிரியரிடம் கற்றுக்கொள்வோம்.

ஆதாரம் : வத்திக்கான் வானொலி

## புனித பூமியிலிருந்து பத்து இலட்சம் செபமாலைகள்

*பானமா நாட்டில், சனவரி 22, செவ்வாயன்று தொடங்கியுள்ள 34வது உலக இளையோர் நாள் நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் உலக இளையோர்க்குப் பரிசாக அளிப்பதற்கென, புனித பூமியிலிருந்து பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட செபமாலைகள் அந்நாட்டிற்கு அனுப்பப்பட்டுள்ளன.*

*துன்புறும் மற்றும் தேவையில் இருக்கும் திரு அவைகளுக்கு உதவுகின்ற பாப்பிறை அமைப்பு, "AveJmj" என்ற திட்டத்தின்கீழ், திருக்கல்லறை அமைப்பின் நிதி ஆதரவுடன், பெத்லகேம் இளம் தொழிலாளர்களைக் கொண்டு, ஆயிரக்கணக்கான செபமாலைகளைத் தயாரித்தது.*

*பெத்லகேமில், வாரத்திற்கு, 2,220 செபமாலைகள் என, 800 தொழிலாளர்களால், பத்து இலட்சத்திற்கு அதிகமான செபமாலைகள் தயாரிக்கப்பட்டன. மூன்று செபமாலைகள், திருத்தந்தையின் படத்துடன் ஒரு பளிங்கு நிறத் தாளில் வைத்து சுற்றப்பட்டு, இளையோர் ஒவ்வொருவருக்கும் அளிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.*

*இந்த மூன்றில் ஒன்றைத் தாங்கள் வைத்துக் கொண்டு, மற்றொன்றை அதைப் பெறமால் இருப்பவர்களுக்கு அளிக்கவும், மூன்றாவதை தங்களுடன் வீடுகளுக்கு எடுத்துச் சென்று, தங்கள் வயதுடைய இளையோர்க்கு அளிக்கவும் பரிந்துரைக்கப்படுவார்கள் எனவும் கூறப்பட்டுள்ளது.*

*இதற்கிடையே, இம்முயற்சி பற்றி கருத்து தெரிவித்த பானமா பேராயர், José Domingo Ulloa Mendieta அவர்கள், செபம் செய்வதற்குத் தூண்டுதலாயும், புனித பூமியிலுள்ள நம் துன்புறும் சகோதரர் சகோதரிகளுக்கு உதவுவதாயும், இம்முயற்சி உள்ளது என்று கூறினார்.*

**ஆதாரம் :** வத்திக்கான் வானொலி



# திரை விமர்சனம்....




- இணையம்

**"வாழ்க்கைல**
**ஒரு தடவைகூட அழாத பணக்காரனும் இல்ல, ஒரு தடவைகூட சிரிக்காத ஏழையும் இல்லை"**

குழந்தைகள் மீது உங்கள் ஆசையைத் திணிக்காதீர்கள் என்பதையும், மகள் - தந்தைக்குமான பாசப் போராட்டத்தையும் கலக்கல் வேட்டி சட்டையில் சொல்லியிருக்கிறது, "விஸ்வாசம்" திரைப்படம்.

தேனியின் கொடுவிலார்பட்டியில் யாருக்கு என்ன பிரச்சினை என்றாலும், கம்பு சுத்தி அதகளம் செய்து நியாயத்தை ரத்தக் களறியுடன் நிலைநாட்டுவது, தூக்குதுரை (அஜித்குமார்) கதாபாத்திரத்தின் பாணியாகும்.

மும்பையில் இருந்து வரும் டாக்டர் நிரஞ்சனா (நயன்தாரா)விற்கு இது முதலில் பிடிக்காமல் போய், பிறகு பிடித்துப் போக காதல் திருமணம் நடைபெறுகிறது. ஆனால், அடிதடிதான் எல்லாம் என இருக்கும் தூக்குதுரையால், குழந்தைக்கு என்ன ஆகுமோ என நினைத்துப் பிரிந்துவிடுகிறார். இறுதியில் என்ன ஆகிறது என்பதுதான், "சிறுத்தை" சிவாவின் "விஸ்வாசம்" திரைப்படம்.

"வீரம்" திரைப்படம் தம்பி சென்டிமென்ட், "வேதாளம்" தங்கை சென்டிமென்ட், "விவேகம்" மனைவி சென்டிமென்ட், அடுத்து என்ன அதேதான் " என்பதுபோல், இதில் மகள் சென்டிமென்ட். ஆனால், இதில் அது வொர்க் அவுட் ஆகியிருக்கிறது.

"வாழ்க்கையில ஒரு தடவைகூட அழாத பணக்காரனும் இல்ல, "ஒரு தடவைகூட சிரிக்காத ஏழையும் இல்ல", "அஞ்சாவதா நிக்கல் உன் அச்சாக நிக்குது" என ஆரம்பித்து, ஏகத்துக்கும் வசனங்கள். ஆனால், பெரிதாக எதுவும் ஈர்க்கவில்லை. முதுகுல குத்திட்டீங்க டைப் வசனங்கள், கிராமத்து டைப் படம் என்பதாலேயே வலிந்து திணித்து விவசாயி வசனங்கள் வைக்காததற்கும் பாராட்டுகள்.

உங்கள் ஆசையைத் திணிச்சு உங்க குழந்தையை வளர்க்காதீங்க என்னும் கருத்தைப் பேசுகிறது "விஸ்வாசம்". அஜித் - சிவா கூட்டணியில் இதுவரை வெளியான "வீரம்", "வேதாளம்", "விவேகம்", "விஸ்வாசம்" வரிசையில், "விஸ்வாசம்" வீர வகை! ●

## எளிய குறிப்புகள்:



காரிலோ, பஸ்ஸிலோ பயணம் செய்யும்போது சில்வர் வோட்டர் போட்டில்களைப் பயன்படுத்துவதே சிறந்தது.



மல்லிகைப் பூவைக் கட்டி காற்றுப் புகாத பொக்ஸில் போட்டு வைத்தால் ஒரு வாரத்திற்கு வாடாமல் புதிது போல் இருக்கும். ஸ்டீல் பொக்சைப் பயன்படுத்துவது நல்லது.



# சிரிக்க: சிந்திக்க...



## முகத்தில் தெரியும்

"ஏங்க... காலங்காத்தால முகத்த உம்முன்னு ஒரு மாதிரியா வச்சிட்டு உட்காந்திருக்கீங்க.....?"

"அதெல்லாம் ஒண்டுமில்லையே....!"

"உங்களோட இருபது வருஷமா குடும்பம் நடத்துறன் .... இதுகூடத் தெரியாதா எனக்கு? என்ன விஷயம் சொல்லுங்க!"

" அது ... அது .... வந்து....!"

"என்ட பெட்டியிலயிருந்து இருநூறு ரூபா பணம் எடுத்துட்டீங்க.... அதானே...?"

"ஹி...! ஹி....!"

"phrenology தெரியுமா உங்களுக்கு?"

"என்னது....?"

"அது ஒரு கலை ..... ஒருவருடைய முகத்தைப் பார்த்தே அவரோட குணாதிசயத்தைக் கண்டுபிடிக்கிறது!"

"அது எப்படி...?"

"ஒருத்தருடைய மூக்கு, வாய், தாடை, கன்னம், கண்கள், நெற்றி, காது - இதுகள்ட வடிவமைப்பைப் பார்த்து அவர் கோபக்காரரா.... அமைதியானவரா ..... அன்புள்ளம் கொண்டவரா..... சந்தேகப்பிராணியா.... உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுகிறவரா.... இரக்கமுள்ளவரா..... புகழ்ச்சியை விரும்புகிறவரா .... சேவை மனப்பான்மை உள்ளவரா....? இதுமாதிரி பல குணங்களைக் கண்டு பிடிக்கிற கலை இது!"



உனக்குத் தெரியுமா அது!"

"இப்பதான் பழகிட்டிருக்கிறன்.... ஓரளவுக்கு சரியா ஊகிச்சுடுவன்!"

"நீ இப்படிச் சொல்றதைக் கேக்குற நேரம் என் மனசுக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா....?"

"ஆனா எனக்கு ரொம்பவும் வருத்தமா இருக்கு.... இந்தக் கலை எனக்கு 1995ம் ஆண்டு நவம்பர் மாதம் 13ம் திகதி எனக்குத் தெரியாமப் போச்சே...ன்னு நினைக்கிற நேரம் எனக்கு எவ்வளவு கவலையா இருக்குத் தெரியுமா....?"

"அண்டைக்கு என்ன விசேசம்...?"

"அண்டைக்குத்தான் உங்கட முகத்த நான் முதல் தடவயா பார்த்தன்...!"

**தென்கச்சி. கோ. சுவாமிநாதனின்**
**'வாரம் ஒரு தகவல்' - இரண்டாம் பாகம்**
**நூலிலிருந்து.....**

## வினா விடைப் போட்டி - இல 09

*சரியான விடைகள் எழுதி 500/= பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்:*


ரா. கிறிஷியன்,
பாரதி வீதி,
ஆறுமுகத்தான் குடியிருப்பு,
தன்னாமுனை.

V. மாக்கிறேற்,
இல. 48, உடையார் வீதி,
கல்முனை - 02,
கல்முனை.

ஜூ. மெலனி,
135, லேடி மெனிங் டிறைவ்,
மட்டக்களப்பு..

**புதிய நியமனம்:**

*16.01.2019 முதல் புளியந்தீவு, புனித மரியாள் பேராலய உதவிப் பங்குத் தந்தையாக அருட்தந்தை பெனடிக்ட் ஜூட் குயின்டர்ஸ் CRS அவர்கள் ஆயர் அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளார்.*





**வினாவிடைப் போட்டிக்கான அனுசரணை வழங்குபவர் :**
திரு. M.M. ஜெஸ்லிராஜ்,
M.J. மெகா எலெக்ரோனிக்ஸ் அன்ட் பேணிச்சர்ஸ்
142 A, விபுலானந்தபுரம், மயிலம்பாவெளி, மட்டக்களப்பு.
தொ.எண்: 0779780151, 0775019977

## வினாவிடைப் போட்டி இல. - 11

1) "செபமாலை" என்பதற்கு இலத்தீன் மொழியில் பொருள் என்ன?

........................................................................................................................

2) உலகின் முதல் பெண் அதிபர் யார்?

........................................................................................................................

3) ஒரு சிலந்தி ஒரு மணிநேரத்தில் எவ்வளவு நீளம் கொண்ட வலையைப் பின்னுகிறது?

........................................................................................................................

4) பிரேசிலின் மிகப் பெரும் கோடீஸ்வரர் "விலை மதிப்பில்லாதது" என எதனைக் குறிப்பிட்டார்? அவை எவை?

........................................................................................................................

5) ஐ.நா. அவையின் 73வது அமர்வின் தலைவராகப் பணியாற்றி வருபவர் யார்?

........................................................................................................................

6) ஸ்கோப்பஸ் மலையில் அமைக்கப்பட்ட இரண்டு முக்கிய அமைப்புகள் எவை?

........................................................................................................................

7) திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் பெயரில், ஏழைகளுக்கு கிறிஸ்மஸ் விருந்தை வழங்கிய விளையாட்டுக் குழு எது? எங்கு இவ்விருந்து இடம்பெற்றது?

........................................................................................................................

........................................................................................................................

8) "நீங்கள் உங்களை வலிமையானவராக நினைத்தால் வலிமையானவர்களாகவே மாறுவீர்கள். பலவீனராக நினைத்தால் பலவீனராகி விடுவீர்கள்" எனக் கூறியவர்:

........................................................................................................................

9) திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் 52வது உலக அமைதி நாளுக்காக அறிவிக்கப் பட்டுள்ள தலைப்பு என்ன?

........................................................................................................................

10) "கொடுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும், அமுக்கி இது விவிலியத்தில் எப் பகுதி யில் இடம்பெறுகிறது?

........................................................................................................................

பெயர் : ..........................................................

முகவரி : ..........................................................

..........................................................

அனுப்பவேண்டிய பங்கு : ..........................................................

அனுப்ப வேண்டிய தபாலகம் : ..........................................................

அனுப்பவேண்டிய முகவரி :

**வினாவிடைப் போட்டி - 11**
**"தொண்டன்"**
**சமூகத் தொடர்பு நிலையம்,**
**அ.பெ. எண் - 44,**
**மட்டக்களப்பு.**

முடிவுத் திகதி : 28.02.2019

188
1 சாமுவேல் 17:12-58
திருவிவிலியம் கற்போம்
பரிசுப் போட்டி
சிறுவர்களுக்கு மட்டும்
முடிவுத் திகதி 28. 02. 2019

**• சரியான விடையைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக**

1. சவுலின் காலத்திலேயே ஈசாய் மிகவும் முதிர்ந்தவராய் இருந்தார். இவருடைய மூத்த புதல்வர் மூவர் ...................... போருக்குச் சென்றிருந்தார்.

   அ) எலியாவுடன் ஆ) தாவீதுடன் இ) சவுலுடன்

2. அந்த பெலிஸ்தியன் காலையிலும் மாலையிலும் ...................... நாள்கள் இவ்வாறு சவால் விட்டான்.

   அ) பனிரெண்டு ஆ) முப்பது இ) நாற்பது

3. அப்பொழுது இஸ்ரயேலரின் படைகள் அணி வகுப்பு நடத்திப் ...................... எழுப்பின இஸ்ரயேலரும் பெலிஸ்தியரும் எதிர் எதிராக அணிவகுத்து நின்றனர். .

   அ) போர்க்குரல் ஆ) அபயக்குரல் இ) கூக்குரல்

4. மக்களோடு அவர் பேசிக்கொண்டிருந்ததை அவர் மூத்த சகோதரன் ...................... கேட்டு தாவீதின் மேல் வெஞ்சினமுற்றான்..

   அ)சம்மாகு ஆ) எலியாபு இ) அபினதாபு

5. இவன் பொருட்டு யாருடைய இதயமும் கலங்க வேண்டியதில்லை. உம் ...................... நானே சென்று அந்தப் பெலிஸ்தியனோடு பேசுவேன் என்றார்.

   அ) அடியானாகிய ஆ) தோழனாகிய இ) கையாளாகிய

6. பின்பு சவுல் தாவீதுக்குத் தம் உடைகளை அணிவித்து ...................... தலைக் கவசத்தை அவர் தலைமேல் வைத்து மார்புக் கவசத்தையும் அவருக்கு அணிவித்தார்.

   அ) செம்புக்கலத் ஆ) வெண்கலத் இ) இரும்புக்கலத்

7. பெலிஸ்தியன் தாவீதைக் கூர்ந்து பார்த்து ...................... செய்தார். ஏனெனில் அவன் சிவந்த மேனியும் அழகிய தோற்றம் உடைய இளைஞனாய் இருந்தார்.

   அ) சிரிக்கக் ஆ) கேலி இ) ஏளனம்

8. தாவீது தம் பையில் கை வைத்து ஒரு கல்லை எடுத்தார். அதைக் கவணில் வைத்து சுழற்றிப் பெலிஸ்தியனுடைய ...................... குறி பார்த்து எறிந்தார்

   அ) நெஞ்சை ஆ) நெற்றியை இ) தலையை

9. தாவீது அப் பெலிஸ்தியனின் தலையை எடுத்து ...................... கொண்டு சென்றார். ஆனால், தம் படைக்கலன்களைத் தம் கூடாரத்தில் வைத்தார்.

   அ) எருசலேமுக்கு ஆ) பெத்லகேமுக்கு இ) இஸ்ரயேலக்கு

10. தாவீது பெலிஸ்தியனைக் கொன்று விட்டு திரும்பிய போது ...................... அவரை சவுலிடம் அழைத்துச் சென்றார். அப்போது அவர் கையில் பெலிஸ்தியனின் தலை இருந்தது.

    அ) சாமுவேல் ஆ) எஸ்ரா இ) அப்னேர்

• வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது

# அறிவை வளர்ப்போம் - 188

பரிசுப் போட்டி



(பொருத்தமான சொற்களின் கீழ்க் கோடிடுக)

**சிறுவர்களுக்கு மட்டும் :**
முடிவுத் திகதி :
**28.02.2019**

1. உலகிலேயே அதிகளவில் எரிமலைகள் எள்ள நாடு :
   (இந்தோனேசியா - மாலைதீவு - அவுஸ்திரேலியா)

2. கௌல்டாம் அணை அமைந்துள்ள நாடு:
   (இந்தியா - அமெரிக்கா - நியூயார்க்)

3. கிரிக்கட் வீரர் சச்சின் டெண்டுல்களர் இளவயதில் டெஸ்ட் கிரிக்கெட்டில் எடுத்த ரன்கள்
   (2000 - 3000 - 1500)

4. "வோலடைல்" எனும் எண்ணெய் காணப்படும பொருள் :
   (பட்டை - கராம்பு - ஏலக்காய்)

5. "நீர் ஆழம் கண்டாலும் ......................... ஆமை காண முடியாது":
   (இதயம் - மனம் - நெஞ்சு)

6. "வண்டல் மண்" எதன் படிவுகளால் ஏற்படுகிறது?
   (நதி - ஆறு - கடல்)

பெயர் : ...........................................................

முகவரி : ...........................................................

...........................................................

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:
...........................................................

பரிசு அனுப்பவேண்டிய பங்கு:
...........................................................

அனுப்பவேண்டிய முகவரி:
திருவிவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்- 188
தொண்டன்
அ. பெ. எண் - 44
மட்டக்களப்பு.




**திருவிவிலியம் கற்போம், அறிவை வளர்ப்போம் : 186,**
பங்கு பற்றியோர் 18 பேர், இரு பிரிவுக்கும் சரியான விடைகளை எழுதியவர் ஒருவர் மட்டுமே.
ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதியோர் 10 பேர்.

## திருவிவிலியம் கற்போம் - 186 விடைகள்

அமலேக்கியரை, மாடுகளையும், பாவம், ஆண்டவர், தொழுதார், ஆகாகை, இராமாவுக்கு, காலம், கொன்று, கன்றுக் குட்டியை

## அறிவை வளர்ப்போம் - 186 விடைகள்

1. வெலிங்டன்
2. இந்தியா
3. 103
4. வெனிஸ்
5. படுவான்
6. செருக்கு

## பரிசுகள் - அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS

போட்டியின் இரு பிரிவுக்கும் சரியான விடைகளை எழுதி Iம் பிரிவில் 300/= பரிசு பெறுபவர்:

* வரப்பிரகாசம் சுசானா,
கடற்கரை வீதி,
களுவாஞ்சிக்குடி - 08.

போட்டியின் ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதி IIம் பிரிவில் 200/= பரிசு பெறுபவர்கள்:

* R. அர்ச்சனா,
சொமஸ்கன் மியானிநகர் (S.R),
தன்னாமுனை.

* பவ்வியா,
காளி கோயில் வீதி,
பெரிய கல்லாறு - 03,
கல்லாறு.

* சாமினி ஜெயக்குமார்,
53/22, சித்திவிநாயகர் குறுக்கு வீதி,
பெரியகல்லாறு - 02.

* பார்த்திபன் சியாம்,
C/O G. கிறிஸ்ரோபர்,
கடற்கரை வீதி,
களுவாஞ்சிக்குடி - 08.

## சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 137 முடிவுகள்

**1ம் பரிசு : 400/=**

* வரப்பிரகாசம் ஒஷாலினா,
கடற்கரை வீதி,
களுவாஞ்சிக்குடி - 08.

**2ம் பரிசு : 300/=**

* இருதயநாதன் ஹபிலக்ஷா,
ஊறியன் கட்டு,
வாகரை.

**3ம் பரிசு : 200/=**

* செல்வராஜா தேவதர்ஷனா,
16, பிரதான வீதி,
பெரிய கல்லாறு.

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. ‐ பீஆ : ர்**

# தொண்டன்

# 50வது ஆண்டு நிறைவு

1969 - 2019

## கட்டுரைப் போட்டி

**தலைப்புகள்:**

1. "நற்செய்தி அறிவிப்பும் அன்னை மரியாளும்"
2. "ஆண்டவரால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் அன்னை மரியாள்"
3. "பெண்களுக்குள் பேறு பெற்றவர் மரியாள்"

### விதி முறைகள்

- முழுத்தாளில் கையெழுத்தாயின் ஐந்து பக்கங்களுக்கு மிகாமலும், தட்டச்செழுத்தாயின் இரண்டு பக்கங்களுக்கு மிகாமலும் இருக்க வேண்டும்.
- தாளில் ஒரு பக்கம் மட்டுமே எழுதப்படல் வேண்டும்.
- வித்தியாசமான சிந்தனைகள் வரவேற்கத்தக்கன.
- முதல் மூன்று தரமான கட்டுரைகள் பரிசுக்குத் தெரிவாகும்.
- பரிசினைப் பெற்ற கட்டுரைகள் தொண்டனில் தொடர்ந்து பிரசுரிக்கப்படும்.
- நடுவர்கள் தீர்ப்பே இறுதியானது.

**அனுப்பவேண்டிய இறுதித் திகதி: 15.03.2019**

**அனுப்பவேண்டிய முகவரி:**

ஆசிரியர் - தொண்டன்
50வது ஆண்டு நிறைவுக் கட்டுரைப் போட்டி,
அ.பொ.இல. 44,
சமூகத் தொடர்பு நிலையம்,
மட்டக்களப்பு.